# தமிழர் பொருண்மியம்

## வாரமலர்

TAMILS ECONOMY

விலை - 50/=

இதழ் - 33

27.08 2023




“ஓலைப்புட்டு” உணவகங்கள் தமிழகத்தில் கலக்கும் நம்மவர்கள் 02

தன்னம்பிக்கையும் விடாமுயற்சியுமே வெற்றிக்கு ... 12

பொருளாதாரத் திட்டத்தின் பங்காளி பனை 21

# அரசுடைமையாகும் கறுப்புப் பணம்

தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வர ... 04



# “ஓலைப் புட்டு” உணவகங்கள் தமிழகத்தில் கலக்கும் நம்மவர்கள்

**- கவிதா -**

“16 வருடங்களுக்கு முன்னாடி சொந்த நாட்டை விட்டு, ரெண்டு நாள்கள் பட்டினி கிடந்து கப்பல்ல வந்து சேர்ந்த எனக்குச் சோறும், கருவாட்டுக் குழம்பும் தந்து பசி தீர்த்தது இந்த மக்கள்தான். இதுவரைக்கும் நான் சாப்பிட்டதிலேயே ரொம்ப ருசியான சாப்பாடுன்னா அன்னைக்குச் சாப்பிட்டது தான்”

பனையோலையில் முடையப்பட்ட பெட்டியில் தயாரான சம்பா அரிசிப் புட்டை பாத்திரத்தில் மாற்றிக்கொண்டே சொல்கிற ரோகிணியின் முகத்தில் அவ்வளவு நெகிழ்ச்சி.

தென் தமிழகத்தின் தூத்துக்குடி செயின்ட் பேட்ரிக் தேவாலயத்தை ஒட்டியிருக்கிறது, ரோகிணியும் மற்றும் பத்து ஈழத்துப் பெண்களும் நடத்தும் ‘ஓலைப்புட்டு உணவகம்.“ யுத்தக்களமாக இருந்த இலங்கையில் இருந்து பல்வேறு காலகட்டங்களில் ஏதிலியர்களாக வந்த பெண்கள் சேர்ந்து இதனைச் சிறப்பாக நடத்துகிறார்கள்.

பனையோலைப் பெட்டியில் தயாராகும் சம்பா அரிசிப் புட்டு, இடியாப்பம் - மாசி சம்பல், சுழியம், தேங்காய்ப்பால் சேர்த்துச் செய்யப்படும் மீன் குழம்பு, இறால் வறுவல், நண்டு வறுவல் என ஈழத்தின் பாரம்பரிய உணவுகளை இங்கே ருசிக்கலாம். யாழ்ப்பாணத்தின் அடையாளமான தொதல் இவர்களால் இப்போது ‘தூத்துக்குடி அல்வா’ ஆகிவிட்டது. தேங்காய் எண்ணெய், வித்தியாசமான மசாலா எனக் கடந்த ஓராண்டில் தூத்துக்குடி வட்டார மக்களை வசீகரித்திருக்கிறது, “ஓலைப் புட்டு உணவகம்”.

தூத்துக்குடியில் கடந்த ஆண்டு நடந்த நெய்தல் கலைத்திருவிழாவில் புலம்பெயர் முகாம்களில் இருக்கும் பெண்களுக்கும் ஒரு ஸ்ரால் வைக்க அனுமதி கிடைத்துள்ளது. ரோகிணி உள்ளிட்ட பெண்கள் அதில் பங்கேற்று இலங்கைப் பாரம்பரிய உணவுகளைச் சமைத்துக் காட்சிப்படுத்தினர். கலைத் திருவிழாவுக்கு வந்திருந்த நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழியை அது ஈர்த்தது. “இதைத் தமிழகமெங்கும் உணவகமாகத்தொடங்கலாம்” என்ற யோசனையை அவர்தான் விதைத்திருக்கிறார். அங்கிருந்து தொடங்கியதுதான் இந்த ‘ஓலைப் புட்டு உணவகம்.’

“தமிழகத்தில் 102 முகாம்களில் 59,000 இலங்கைத் தமிழ் ஏதிலிகள் உள்ளனர். தூத்துக்குடியைச் சுற்றியுள்ள மாப்பிள்ளையூரணி, தாப்பாத்தி, குளத்துவாய்ப்பட்டி, தாளமுத்து நகர் முகாம்களிலுள்ள 11 பெண்களைத் தேர்ந்தெடுத்தோம். அவர்களுக்குப் பெரிய உணவகங்களில் பயிற்சி கொடுத்தோம். அதன்பிறகு, தமிழக அரசு, அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஆணையம் (UNHCR), ஈழ ஏதிலியர் மறுவாழ்வு அமைப்பு, ஹாட் பிரட் நிறுவ






னர் மகாதேவன் ஆகியோர் பங்களிப்பில் ரூ. 15 இலட்சம் செலவில் கடந்த ஆண்டு அக்டோபர் 27ஆம் திகதி 'ஓலைப்புட்டு உணவகம்' தொடங்கப்பட்டது...'' என்கிறார், ஏதிலியர் மறுவாழ்வு அமைப்பின் வாழ்வாதாரத் திட்டப் பணியாளர் கே.ரத்ன ராஜாசிங்கம்.

'ஓலைப்புட்டு உணவக''த்தில் இப்போதைக்கு மதியமும் இரவும் மட்டுமே சாப்பிட முடியும். மதியம், சிறப்பான கடலுணவுச் சாப்பாடு. தேங்காய்ப் பால், திரிப்பு மசாலா சேர்த்த மீன் குழம்பு, நண்டுக் குழம்பு, இறால் குழம்பு, கணவாய்க் கறி, காய்கறிக் கூட்டு, கீரைக் கூட்டு, சுண்டல் என எல்லாவற்றிலும் ஈழம் மணக்கிறது. அதிலும் சூரை மீன் கொண்டு செய்யப்படும் மாசிச் சம்பல், வேறு ரகம்.

மாலை நான்கு மணிக்கெல்லாம் சம்பா அரிசி இடியாப்பம், சிவப்பரிசிப் புட்டு, அதற்கு இணையுணவாகச் சொதி. இரவு, புட்டு... தொட்டுக்கையாக இறால் மசாலாவும் கோழிக்கறியும். இதற்கு மிகப்பெரும் வாடிக்கையாளர் கூட்டம் உண்டு. புட்டு, இடியாப்பங்களைப் பனை ஓலைகளால் முடையப்பட்ட நீத்து பெட்டியில் வேகவைக்கிறார்கள். இந்தப் பெட்டி ஏதிலியர் முகாம்களில் உள்ள பெண்களால் முடையப்படுகிறது.

"மூணு நாளுக்கு ஒருமுறைதான் தொதல் செய்வோம். ரொம்ப வேலை பிடிக்கும். அம்பது தேங்காய்களை உடைச்சுத் துருவி, பால் எடுத்து, பெரிய பாத்திரத்தில கொட்டிக்குவோம். கருப்பட்டிய பாகு காய்ச்சி ஊத்தி, தேவையான பொருள்களைச் சேர்த்து நாலு மணி நேரம் தோள்பட்டை வலிக்க வலிக்கக் கிண்டணும். விட்டா அடிப்புடிச்சு வீணாப் போயிடும். தொதல் செஞ்சு வச்சாலே அடுத்த ரெண்டு மூணு மணி நேரத்துல காலியாயிடும்.

“மாலை நான்கு மணிக்கெல்லாம் சம்பா அரிசி இடியாப்பம், சிவப்பரிசிப் புட்டு, அதற்கு இணையுணவாகச் சொதி. இரவு, புட்டு... தொட்டுக்கையாக இறால் மசாலாவும் கோழிக்கறியும். இதற்கு மிகப்பெரும் வாடிக்கையாளர் கூட்டம் உண்டு. புட்டு, இடியாப்பங்களைப் பனை ஓலைகளால் முடையப்பட்ட நீத்து பெட்டியில் வேகவைக்கிறார்கள். இந்தப் பெட்டி ஏதிலியர் முகாம்களில் உள்ள பெண்களால் முடையப்படுகிறது.”

வாசனையே ஊரைக்கூட்டிடும். வாங்குறவங்கள்ல பலர் 'இதை எப்படிச் செய்றது, என்னென்ன சேர்க்கணும்"னு கேப்பாங்க. செய்முறையைச் சொல்லிக் கொடுப்போம்'' என்கிறார் கிருஷ்ணவேணி. மாப்பிள்ளையூரணி முகாமில் இருக்கும் கிருஷ்ணவேணி, தமிழகம் வந்து 25 ஆண்டுகளாகிறது.

"சாப்பிட வர்றவங்க 'வீட்டுச் சாப்பாடு போல இருக்கு, எங்க வீட்டு விசேஷத்துக்கெல்லாம் வந்து சமைப்பீங்களா'ன்னு கேப்பாங்க. சந்தோஷமா இருக்கும். இப்போ வெளியில விசேஷங்களுக்கும் போய் சமைச்சுத் தர்றோம். அகதிகள் முகாமை விட்டு வெளியே வர்றதே ஒருமாதிரி நிம்மதியைத் தருது. சொந்தக்காரங்களையெல்லாம் விட்டுட்டு ஆளுக்கொரு திசையில வாழ்ந்துக்கிட்டிருக்கோம். இங்கே நிறையச் சொந்தங்கள் உருவான மாதிரி இருக்கு. சமைக்கப்போற வீடுகளெல்லாம் சொந்தக்கார வீடுகள் மாதிரி ஆகிடுது. இங்கே எங்களை யாரும் வேறு நாட்டைச் சேர்ந்தவங்கன்னு நினைக்கிறதில்லை. அக்கா, தங்கையா ஏத்துக்கிட்டாங்க...'' என்று நெகிழ்கிறார் கிருஷ்ணவேணி.

இந்தப் பெண்கள் வசிக்கும் முகாமிலிருந்து உணவகம் இருக்கும் இடம் 60 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிறது. அதிகாலை எழுந்து மூன்று பேருந்துகள் மாறி வருகிறார்கள். காலை 8 மணிக்குக் கிளம்பினால் முகாம் திரும்ப இரவு 12 மணியாகி விடுமாம். இந்த 11 பெண்களின் வெற்றி, பிற ஏதிலியர் முகாம்களில் வசிக்கும் பெண்களையும் உற்சாகப்படுத்தியிருக்கிறது. தமிழகமெங்கும் நிறைய இடங்களில் ஓலைப்புட்டு உணவகங்கள் திறக்கப்படும் என்கிறார்கள் ஏதிலியர் மறுவாழ்வு அமைப்பினர்.

தூத்துக்குடிப் பக்கம் போனால் ஓலைப்புட்டுக் கடைக்கு ஒரு தடவை போய் வாருங்கள். எமது சகோதரிகளின் கைமணக்க ருசிப்பது இனிய அனுபவம்!

மின்மடல் : tamilseconomy@gmail.com
தொலைபேசி : 0764438620

## வரட்சியும் நிவாரணமும்

நாட்டில் தொடரும் வரட்சியான கால நிலையால் விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள். பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நிவாரணங்களைப் பெற்றுக்கொடுப்பதற்காக வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதாகச் சொல்லப்பட்டாலும், இதுவரையில் அதனால் யாரும் பயனடைந்ததாகத் தகவல் இல்லை. இது தொடர்பில் அரசாங்கத்திடமும் ஆக்கபூர்வமான திட்டங்கள் எதுவும் இருப்பதாகவும் தெரியவில்லை.

இலங்கை கடந்த காலங்களிலும் வரட்சியை எதிர்கொண்டிருக்கின்றது. ஆனால், இந்த வருடம் வரட்சி தொடர்ச்சியாக இருப்பது அதன் பாதிப்பை அதிகமாக்கியிருக்கின்றது. அதனைவிட, பாரிய பொருளாதார நெருக்கடி ஒன்றிலிருந்து நாடு மீள்வதற்கு முயற்சித்துக்கொண்டிருக்கும் நிலையில் இந்த வரட்சி மக்களைத் தாக்கியிருக்கின்றது. விவசாயிகளின் பாதிப்பு அதிகமாக இருப்பதற்கு அதுவும் ஒரு பிரதான காரணம்.

பொருளாதார நெருக்கடியால் அதிகளவுக்குப் பாதிக்கப்பட்ட தரப்பாக விவசாயிகளே இருந்துள்ளார்கள். அவர்களுக்குத் தேவையான உரம், களை கொல்லி, கிருமி நாசினி என்பன திடீரெனத் தடைவிதிக்கப்பட்டு, எரிபொருளையும் பெற முடியாத ஒரு நிலையில் விவசாயிகள் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டிருந்த ஒரு அவலத்தைக் கடந்த வருடத்தில் பார்த்தோம். அந்த நேரத்தில் வீதிகளில் இறங்கிய விவசாயிகளுக்குச் சரியான பதிலைக்கூறக் கூடிய நிலையில் அரசாங்கம் இருக்கவில்லை.

அந்தப் பாதிப்புக்களிலிருந்து விவசாயிகள் மீள்வதற்கு முன்னதாகவே தற்போதைய வரட்சி கடுமையான தாக்கத்தைக் கொடுக்கத் தொடங்கியிருக்கின்றது. காலநிலையை முன்கூட்டியே அறியக் கூடிய வசதிகள் இருந்தாலும் கூட, அரசாங்கம் முன்ஜாக் கிரதையான நடவடிக்கைகள் எதனையும் எடுத்திருக்கவில்லை. விவசாயிகளுக்கு அது தொடர்பான முன்னெச்சரிக்கையைக் கொடுக்கவும் இல்லை. அவ்வாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தால் பாதிப்புக்கள் குறைவாக இருந்திருக்கும்.

பயிர்ச்செய்கைக்குத் தேவையான நீர் இல்லாத நிலையிலும், வரட்சியால் பாதிப்புக்கள் அதிகரித்த நிலையிலும் விவசாயிகள் வீதிகளில் இறங்கிப் போராடத் தொடங்கியபோதுதான் அரசாங்கம் விழித்துக்கொண்டது. இந்தப் போராட்டத்தின் பின்னணியில் மற்றொரு அரகலயவை உருவாக்கும் சதி உள்ளதாக அரசாங்கம் எச்சரித்தது. விவசாயிகள் மட்டுமல்ல கால் நடை வளர்ப்பாளர்கள் கூட இந்த வரட்சியால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இயற்கை அனர்த்தங்களால் இவ்வாறு பாதிக்கப்படுபவர்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கான பொறிமுறைகள் எதுவும் அரசாங்கத்திடம் இல்லை. மக்கள் வீதிகளில் இறங்கிய பின்னர்தான் அரசாங்கம் எதனையாவது செய்ய வேண்டும் எனச் சிந்திக்கின்றது. இவ்வாறான நிலைமைகளைக் கையாள்வதற்கு உறுதியான செயற்றிட்டங்களை அரசாங்கம் உருவாக்கிக் கொள்வது குறித்து இப்போதாவது திட்டமிடுவது அவசியம்.

# அன்புள்ள ஆசிரியருக்கு....



## இஸ்ரேல் நல்லதொரு முன்மாதிரி

இஸ்ரேலில் கால்நடை வளர்ப்பு எந்தளவுக்கு முன்னேறியிருக்கின்றது என்பதையும், அதற்காக அவர்கள் எவ்வாறு அர்ப்பணிப்புடன் செயற்பட்டார்கள் என்பதையும் கடந்த மூன்று வாரங்களாக டாக்டர் கிருபானந்தகுமாரன் விளக்கமாக எழுதியிருந்தார். மிகவும் கடினமானதொரு சூழ்நிலையிலிருந்து விடாமுயற்சியாலும், அர்ப்பணிப்புடன் செயற்பட்டதாலும் அவர்கள் இந்த நிலையை அடைந்திருக்கின்றார்கள். இது எமக்குச் சிறந்ததொரு முன்னுதாரணம். அவர்களால் முடியும் என்றால், எம்மால் ஏன் முடியாது? அதற்கான முயற்சிகளை நாமும் முன்னெடுக்க வேண்டும் என்பதுதான் இந்தக் கட்டுரை சொல்லும் செய்தி என நான் நினைக்கிறேன்.

**தங்கவேல் தங்கராஜா, மட்டக்களப்பு.**

●●●

## காலநிலை மாற்றமும் பொருளாதாரமும்

காலநிலை மாற்றம் பொருளாதாரத்தை எந்தளவுக்குப் பாதிக்கப்பேகின்றது என்பதைக் கடந்த வாரம் சேரமான் எழுதிய கட்டுரை வெளிப்படுத்தியிருந்தது. தொடரும் வெய்யில் கால நிலை மக்களுடைய அன்றாட வாழ்க்கையை மட்டும் பாதிக்கவில்லை. நாட்டின் பொருளாதாரத்தையும் பாதிக்கப்போகின்றது என்ற முன்னெச்சரிக்கையை அந்தக் கட்டுரை தந்திருக்கின்றது. அதனை எதிர்கொள்வதற்கு மக்கள் தயாராக வேண்டும் என்ற செய்தியும் அதன் மூலம் வெளிப்பட்டுள்ளது. இதுபோன்ற விடயங்களே இன்றைய காலகட்டத்தில் எமக்குத் தேவை.

**என். மதிமுகராஜா, கல்வியங்காடு**


## தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வர ...

சந்தாதாரராகுங்கள்!

* மூன்று மாதங்களுக்கு 1,300 ரூபா தபால் செலவு உட்பட
* ஆறு மாதங்களுக்கு 2,600 ரூபா தபால் செலவு உட்பட

சந்தாத் தொகையை Green media House (Pvt) Ltd என்ற பெயரில், HNB Bank - Jaffna Metro branch - 016010023281 கணக்கு இலக்கத்துக்குச் செலுத்தி, அதற்கான பிரதியுடன் கீழேயுள்ள படிவத்தையும் நிரப்பி வாட்ஸ்அப் மூலமாகவோ தபால் மூலமாகவோ அனுப்பி வையுங்கள்.

மறு வாரத்திலிருந்து தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வரும்!

அனுப்பிவைக்க வேண்டிய முகவரி -

Green media House (Pvt) Ltd,
68, crossette lane, Jaffna.

வாட்ஸ் அப், வைபர் இலக்கங்கள் - 0777 276 949

------------------------------------------------------------

தமிழர் பொருண்மியம் - சந்தாப் படிவம்

பெயர் - ---------------------------------------------------

முகவரி - -------------------------------------------------

தொலைபேசி இலக்கம் - -----------------------------------

சந்தாக் காலம் - -------------------------------------------

செலுத்திய தொகை - ---------------------------------------

செலுத்திய திகதி - -----------------------------------------




**இலங்கையில் 22 கரட் (ஒரு பவுண்) தங்கத்தின் சந்தை விலை 1,61,200 ரூபா.**

**24 கரட் தங்கம் 1,75,8 00 ரூபாவுக்கு நேற்றைய தினம் விற்பனை செய்யப்பட்டது.**



# கேளுங்கள் தரப்படும்

**கேள்வி -** பாகிஸ்தான் தற்போது எதிர்கொள்ளும் பொருளாதார அரசியல் நெருக்கடிகளுக்குச் சீனாதான் காரணம் என்று சொல்லப்படுகின்றதே. அதுஉண்மையா?

**ஜெயவதனா ஜெயராம்.**
**சண்டிலிப்பாய்.**

**பதில் -** நிச்சயமாக அவ்வாறான கருத்து பொருளாதார ஆய்வாளர்களாலும் முன்வைக்கப்படுகின்றது. இலங்கையைப் போலவே பாகிஸ்தானும் சீனாவின் கடன் பொறிக்குள் சிக்குண்டுள்ளதாக ஒரு கருத்துள்ளது. அதற்குக் காரணங்களும் உள்ளன.

உலகெங்கிலும் குழப்பமான பொருளாதாரச் சூழல் இருந்தபோதிலும், இலங்கைக்கும், பாகிஸ்தானுக்கும் சீன நிதி வழங்கல்கள் மிக அதிகமாகவே உள்ளன. இந்தியாவைச் சுற்றியுள்ள இந்த இரு நாடுகளையும் தங்களுடைய கடன் பொறிக்குள் வைத்துத் தமது தேவைகளுக்குப் பயன்படுத்தலாம் எனச் சீனா திட்டமிட்டுச் செயற்படுவதாகவும் குற்றச்சாட்டு உள்ளது.

கடந்த சில வருடங்களாக பாகிஸ்தானும் இலங்கையும் சீனாவின் பாரிய செல்வாக்கின் கீழ் வந்து, அறியாமலேயே பாரிய கடன் பொறிகளுக்குள் நுழைந்து விட்டன என்பது மேற்குலகின் கருத்து.

இது முக்கியமாகச் சீனாவின் பெல்ட் அண்ட் ரோடு முன்முயற்சியின் காரணமாகும், அங்கு உள்கட்டமைப்பு திட்டங்களை மேம்படுத்த நாடுகள் பாரிய கடன்களைப் பெறுகின்றன. இருப்பினும், இந்த நாடுகளில் பல கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமல் இப்போது முடங்கும் கடனை எதிர்கொள்கின்றன. இது அவர்களின் பொருளாதாரத்தில் பெரும் அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளது. மற்றும் பொருளாதார உதவிக்காக அவர்கள் சீனாவை பெரிதும் நம்பியிருக்கும் சூழ்நிலைக்கு வழிவகுத்தது.

ஆயினும்கூட, சீன உதவியானது சரங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது, எனவே சீனக் கடனுக்கு இணை வைக்காமல் கடன் வலையில் உள்ள நாடுகளுக்கு தப்பிக்கும் வழி இல்லை. உதாரணமாக, இலங்கையில் உள்ள ஹம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பில் சீனாவுடன் அரசாங்கம் 99 வருட குத்தகை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.

உலகளாவிய முதலீடு மற்றும் உள்கட்டமைப்பு திட்டமான பெய்ஜிங்கின் பெல்ட் அண்ட் ரோடு முன்முயற்சியின் (பிஆர்ஐ) மிகப்பெரிய பங்காளியாக அறியப்படும், சீனா-பாகிஸ்தான் பொருளாதாரத் தாழ்வாரம் 2013 இல் 45 பில்லியன் டொலருக்கும் அதிகமான திட்டமிடப்பட்ட முதலீடுகளுடன் ஆரம்பிக்கப்பட்டது.

காலப்போக்கில், அது 62 பில்லியன் டொலருக்கும் அதிகமாக வளர்ந்தது, இதில் குறைந்தபட்சம் 25 பில்லியன் டொலர் பாகிஸ்தானில் முதலீடு செய்யப்பட்டது.

இவ்வாறு இலங்கையைப் போலவே பாகிஸ்தானும் சீனாவின் கடன் பொறிக்குள் விழுந்தது. அந்த நாட்டின் தற்போதைய அரசியல் பிரச்சினைக்கு அதுவும் ஒரு காரணம்.

## கேளுங்கள் தருகின்றோம்

தமிழர் பொருண்மியம் வாசகர்கள் பொருளாதாரம் உட்பட அதனுடன் தொடர்புபட்ட தங்களுடைய கேள்விகளை - சந்தேகங்களை எமக்கு அனுப்பி வைக்கலாம். அடுத்த வாரம் முதல் அதற்கான களம் திறக்கப்படுகின்றது. உங்கள் கேள்விகளை அனுப்பிவைக்க வேண்டிய மின்னஞ்சல் முகவரி -
tamilseconomy@gmail.com




| | |
|---|---|
| கத்தரிக்காய் | - 150/= |
| உருளைக்கிழங்கு | - 200/= |
| பச்சைமிளகாய் | - 300/= |
| தக்காளி | - 200/= |
| மரவள்ளிக்கிழங்கு | - 200/= |
| கோவா | - 250/= |
| கரட் | - 350/= |
| பூசணி | - 120/= |
| புடோல் | - 80/= |
| வாழைக்காய் | - 150/= |
| சின்ன வெங்காயம் | - 250/= |
| பெரிய வெங்காயம் | - 200/= |
| பாவற்காய் | - 350/= |
| வெண்டிக்காய் | - 100/= |
| கருணைக்கிழங்கு | - 160/= |
| பயற்றங்காய் | - 250/= |
| லீக்ஸ் | - 200/= |
| பீற்றூட் | - 150/= |
| கறிமிளகாய் | - 300/= |
| முருங்கைக்காய் | - 250/= |
| போஞ்சி | - 350/= |
| கத்தரி - தம்புள்ள | - 100/= |




**வாங்கும் விலை**

| | |
|---|---|
| அவுஸ்திரேலிய டொலர் | 203/= |
| கனடா டொலர் | 233/= |
| சீன யுவான் | 43/= |
| யுரோ | 343/= |
| ஜப்பான் யென் | 2.1/= |
| சிங்கப்பூர் டொலர் | 233/= |
| ஸ்ரேர்லிங் பவுண் | 402/= |
| சுவிஸ் பிராங் | 358/= |
| அமெரிக்க டொலர் | 317 /= |

**விற்கும் விலை**

| | |
|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 215/= |
| கனடா டொலர் | 245/= |
| சீன யுவான் | 45/= |
| யுரோ | 360/= |
| ஜப்பான் யென் | 2.2/= |
| சிங்கப்பூர் டொலர் | 245/= |
| ஸ்ரேர்லிங் பவுண் | 420/= |
| சுவிஸ் பிராங் | 378/= |
| அமெரிக்க டொலர் | 329/= |

# இயற்கை விவசாயத்திற்கான ஆலோசனைகள்:



1.தாழ்வான பகுதியிலுள்ள வயல்வெளிகளில் இயற்கை வேளாண்மை செய்வதென்றால் அவ்வயல்களைச் சுற்றி வரப்புக்களை உயர்த்தி அமைக்கவேண்டும். அப்பொழுதுதான் மழைக்காலங்களில் மற்ற வயல்களிலுள்ள இரசாயனப் பொருட்கள் மழைநீரில் வருவது தடுக்கப்படும்.

2.இயற்கை விவசாயத்திற்கு இயற்கை இடுபொருள்களைப் பயன்படுத்தும் முன்னர் ரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லிகள் மற்றும் பொலிதீன் பேப்பர்களைப் பயன்படுத்துவதைத் தவிர்த்து வருதல் வேண்டும்.

அப்பொழுதுதான் மண்ணின் மலட்டுத் தன்மை முதலில் சரியாகும்.

மண்ணின் மலட்டுத்தன்மை சரியாகப் பட்டால் மட்டுமே ஓரிரு ஆண்டுகளின் பின்பு சரியான விளைச்சலை எமக்கு கொடுக்கும்.

3. விதைகளில் முற்காலத்தில் பயன்படுத்திய நாட்டு இரகங்களைப் பயன்படுத்துதல் நல்லது.

4. அதிக பொருட்செலவில் இடுபொருள்களை இட்டு அதிக விளைச்சல் என்பதை விடக் குறைந்த செலவில் ஆரோக்கியமான இடுபொருட்கள் இட்டுச் சராசரியான விளைச்சல் என்ற இலாப நோக்கத்தைப் பின்பற்ற வேண்டும்.

5.தண்ணீர் மற்றும் மின்பற்றாக்குறை சிரமங்களைக் கருத்தில்கொண்டு தூவல் பாசனம், சொட்டுநீர் பாசனம் போன்ற நீர் சிக்கனமான முறையினைப் பயன்படுத்த வேண்டும்.

6. களைகளை நீக்க. மக்கு மூடாக்கு முறைகளைப் பயன்படுத்தலாம்.

7.இயற்கைமுறைகளில் பூச்சிக்கொல்லிகள் அல்லது பூச்சிவிரட்டிகளை நாமே தயாரித்தல் வேண்டும். (செலவும் குறைவு)

8.உப தொழிலாக விவசாயத்தின் உற்ற நண்பர்களான கால்நடைகள் வளர்க்க வேண்டும்.

அதிலும் நாட்டு இரகங்களை தேர்வு செய்தல் மிகவும் நல்லது.

9. பயிர்ச் சுழற்சி முறைகள் மற்றும் காலத்திற்கேற்பப் பயிர்களை தேர்வு செய்தல் வேண்டும்.

10.பசுந்தாள் உரங்களை பூக்கள் வரும் முன் மடக்கி உழவு செய்து பயன்படுத்த வேண்டும்.

11.அந்தந்த பிரதேசத்தில் உள்ள விவசாயிகள் தங்களுக்குள் பாரபட்சமின்றி ஒரு சங்கமாகச் சேர்ந்து வேளாண்மையை வலுப்படுத்தவேண்டும்.

12.வருடம் முழுவதும் பயிர்செய்தலை தவிர்த்து கோடையில் உழுது குறிப்பிட காலங்களுக்கு மண்ணை ஆறவிடவேண்டும்.

13.கோடைக்காலங்களில் அறுவடை முடிந்த வயல்களில் கால்நடைகளுக்குக் கிடைகள் இட்டு (பட்டியமைத்து) மண்ணின் தரத்தை உயர்த்தவேண்டும்.

14.மழைநீர் தேங்கும் வகையில் கடைசி உழவைக் குறுக்குவாக்கில் உழுதல் வேண்டும். அப்பொழுதுதான் மண்ணின் ஈரப்பதம் பாதுகாக்கப்படும்.

15.உதவியாட்களின் தினக்கூலி உயர்வு மற்றும் ஆட்களின் வரவுக் குறைவு ஆகிய வற்றிற்கு மாற்றாக இயந்திரங்களை உபயோகிக்கவேண்டும்.

16.பயிர்கள் அறுவடை செய்தபின் சருகிற்குத் தீயிடாமல் மக்க வைக்கவேண்டும்.

இதனால் மண்ணிற்கு ஊட்டம் மற்றும் ஈரப்பதம் சேமிப்புச் செய்யப்பட்டுப் பாதுகாக்கப்படும்.

17.கிணறு மற்றும் மின்கம்பங்களின் அருகில் நீண்டகால வயதுடைய மரக்கன்றுகள் நடுவதை தவிர்க்கவேண்டும்.

18. பயிர்களுக்கு நீர்பாய்ச்சும்போது அதிகமாக நீர் தேக்கிவைத்தல் கூடாது இதனால் பயிர்களின் வேர் சுவாசம் தடைப்பட்டு வளர்ச்சி குறையும்.

அத்தோடு வேரழுகல் நோய் தாக்குவதற்குரிய சாத்தியக்கூறுகள் அதிகமாக இருக்கும்.

19.பயிர்களின் எண்ணிக்கையைக் கணக்கிட்டு அளவுகளுக்கு ஏற்ப வரிசை முறையில் நடவு செய்யவேண்டும். இதனால் போதிய சூரிய ஒளி கிடைப்பதுடன் அதிக விளைச்சலும் கிடைக்கும்.

மாறாகப் பயிர்களுக்கு இடையிலான நெருக்கம் அதிகரித்தால் விளைச்சல் குறைவடையும்.

20.பார்கள் (பாத்திகள்) அமைக்கும் போது வடிகால் இருக்குமாறு பார்த்துக் கொள்ளவேண்டும்.

21.வாழை,பருத்தி,பப்பாளி போன்ற பயிர்களை அப்புறப்படுத்தாமல் நிலத்திலேயே மடக்கி உழுதல் வேண்டும்.

22.விவசாய நிலத்தில் தேவையற்ற பொருள்களைத் தீயிட்டு எரிக்கக் கூடாது இதனால் அங்குள்ள மண்புழுக்கள் இறக்க நேரிடும்.

இதனால் எதிர்காலத்தில் விளைச்சல் குறைவடையும்.

23.வயல் நிலங்களில் வரப்புகள் அமைக்கப்படும்போது குறைந்தது ஒரு ஏக்கருக்கு நான்கு வரவைகள் இருக்க வேண்டும்

ஒவ்வொரு வரவைகளின் நிலப் பகுதி சமமாக இருக்க வேண்டும்.

24.ரசாயனத்தினை பயன்படுத்தி பயிர்செய்கை மேற்கொண்ட நிலத்தினை இயற்கை விவசாயத்திற்கு மாற்றும் போது குறைந்தது மூன்று அல்லது நான்கு ஆண்டுகள் வரை காத்திருக்க வேண்டும்.

25.எந்தப் பயிர் செய்வதாக இருந்தாலும் நிலத்தினை இரண்டு அல்லது மூன்று முறை உழவு செய்து மண்ணில் காற்றோட்டத்தை ஏற்படுத்த வேண்டும். அப்போது தான் அதிக விளைச்சலைப் பெற முடியும்.

26.பயிர் செய்யப்பட்ட நிலத்தில் களைகளை மண்வெட்டியால் அகற்றுவதை விடக் கைகளால் பிடுங்கினால் அவ்விடத்தில் உள்ள பயிர்களில் விளைச்சல் சற்று அதிகமாக இருக்கும்.

27.ஒருங்கிணைந்த பண்ணை விவசாயத்தினை மேற்கொள்ளும் பண்ணையாளர்கள் தங்கள் பண்ணையில் சிறிய குளங்கள் அமைத்து மீன்கள் வளர்த்த நீரினை அனைத்துப் பயிர்களுக்கும் பயன்படுத்தலாம் இவ்வாறு செய்வதனால் அப்பயிர்களின் விளைச்சல் அமோகமாக இருக்கும் அதோடு பயிர்களின் நோய் தாக்கம் மிக மிகக் குறைவாக இருக்கும்.

**லக்சிபண்ணை**

# வரி விளம்பரம்

# classified advertisement




## வேலைவாய்ப்பு

தமிழ்த் தட்டச்சுத் தெரிந்த பக்க வடிவமைப்பாளருக்கான முழுநேரப் பகுதிநேர (இரவு) வேலைவாய்ப்பு உள்ளது. அனுபவத்திற்கு ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும். தொடர்புகளுக்கு - 0777277009

---

எழுதுமட்டுவாழ் பகுதியில் அமைந்துள்ள இயற்கை விவசாயப் பண்ணையில் தங்கி நின்று வேலைசெய்யக்கூடிய ஆண் தோட்டக்காரர் தேவை. உணவு, தங்குமிட வசதி செய்துதரப்படும்.

தொடர்புகளுக்கு - 0766482303

---

நாவற்குழியில் உள்ள விருந்தினர் விடுதி (Hotel) ஒன்றில் அறை பராமரிப்பாளர், சுத்திகரிப்புத் தொழிலாளி, உணவு பரிமாறுபவர் ஆகிய வேலைவாய்ப்புகள் உள்ளன. சம்பளத்திற்கு மேலதிகமாக ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளும் வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777276818

---

யாழ் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் அமையவுள்ள உள்ளூர் உற்பத்திப் பொருள் விற்பனை அங்காடியில் விற்பனை உதவியாளர் வேலைவாய்ப்பு உள்ளது. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு 0767403814

---

நாட்டின் பல பாகங்களில் வியாபாரத்தினைக் கொண்டுள்ள நிறுவனத்தின் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அலுவலகத்திற்குக் கணக்கு உதவியாளர் (Accounts Assistant) வேலைவாய்ப்பு உள்ளது. கணக்குவழக்குப் பராமரித்தல், வங்கி நடவடிக்கைகள் மேற்கொள்ளல் என்பன வேலைகளாக இருக்கும். அனுபவம் வாய்ந்த கணக்காளரின் கீழ் வேலைசெய்யும் வாய்ப்பு.

தொடர்புகளுக்கு 0777299386

---

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள **Software and Web Developement** நிறுவனத்திற்குச் சகல நிலைகளுக்குமான ஆள் சேர்ப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அனுபவம் உள்ளவர்கள் மற்றும் பயிற்சிபெற விரும்புபவர்கள் உங்களின் சுயவிபரக் கோவையினை **onlinew4u@gmail.com** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். (மின்னஞ்சலின் **subject** இல் **Software and Web Developement** குறிப்பிட்டு அனுப்பவும்)

---

விளம்பரம் சேகரிப்பாளர் **(Advertisement Collector)** முழுநேர, பகுதிநேர வேலைவாய்ப்பு - அடிப்படைச் சம்பளம் மற்றும் மேலதிகக் கொடுப்பனவு வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777277009

---

வாகனச் சாரதிக்கான வேலைவாய்ப்பு. **light vehicle driving license - B, C, G1** சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு 0770684905

---

## SALE விற்பனைக்கு

தரமான சுவையான குறிஞ்சிக் கோப்பி விற்பனைக்கு உண்டு. மலையகத்தில் இருந்து பெறப்பட்ட தரமான கோப்பியில் இருந்து சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட யாழ்ப்பாணச் சுவையுடனான கோப்பிகள் 100g **Tin**களில் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு 0764438620

---

கறுவாக் கன்றுகள் விற்பனைக்கு உள்ளன. யாழ்ப்பாணத்துச் சீதோஸ்ணத்தில் வளரக்கூடிய கறுவாக் கன்றுகள். 2 கன்றுகள் அடங்கிய பை 150 ரூபாய் மட்டுமே.

தொடர்புகளுக்கு - 0766482303

---

வீட்டுத் தோட்ட விதைகள் விற்பனைக்கு உள்ளன - 0763352782 - கிளிநொச்சி

---

சுத்தமாகத் தயாரிக்கப்பட்ட நவதானியங்கள் அடங்கிய சத்துமா விற்பனைக்கு உண்டு. - 0760225528 மன்னார்.

---

புரோட்டின் நிறைந்த கச்சான் லட்டுக்களைப் பெற்றுக்கொள்வதற்கு - 0777 421896 கிளிநொச்சி.

---

அனைத்து வகையான வடகங்கள் மற்றும் மூலிகைப் பொருட்களைப் பெற்றுக் கொள்ள - 0779151820 கிளிநொச்சி.

---

பாரம்பரிய முறையில் தயார் செய்யப்பட்ட சுத்தமான தேங்காய் எண்ணெயைப் பெற்றுக் கொள்வதற்கு நீங்கள் அழைக்க வேண்டிய இலக்கம். - 0766982219 யாழ்ப்பாணம்.

---

மூலிகைகளால் தயாரிக்கப்படும் சுத்திகரிப்புப் பொருட்கள் மற்றும் சவர்க்காரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு - 0773972309 மன்னார்.

---

யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்படும் பத்திக் துணிகளையும் ஆடைகளையும் கொள்வனவு செய்வதற்குத் தொடர்புகொள்ளவும் - 0776126448

வாரஇதழ்...

தமிழர் பொருண்மியம் வாரமலர் TAMILS ECONOMY

| கறுப்பு வெள்ளை விளம்பரம் | |
|---|---|
| வரி விளம்பரம் | இலவசம் |
| பெட்டி விளம்பரம் | 600.00 |
| ¼ பக்கம் | 3,500.00 |
| ½ பக்கம் | 6,000.00 |
| முழுபக்கம் | 10,000.00 |

| வர்ண விளம்பரம் | |
|---|---|
| பெட்டி விளம்பரம் | 900.00 |
| ¼ பக்கம் | 5,000.00 |
| ½ பக்கம் | 9,000.00 |
| முழுபக்கம் | 16,000.00 |

தமிழர் பொருண்மியம் வாரஇதழில் உங்கள் விளம்பரங்களை வெளியிட

0777 27 69 49 | 076 443 8622

#68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.

## வரி விளம்பரம் classified advertisement




பாடசாலை மாணவர்களுக்கான புத்தகப் பைகளை மிகத் தரமானதாகவும் குறைந்த விலையிலும் பெற்றுக்கொள்ள அழையுங்கள். - 0772034807

---

கிளிநொச்சியில் நியாயமான கட்டணத்தில் வடி ரக வாகனத்தை வாடகைக்கு அமர்த்தலாம். - தொடர்புகளுக்கு - 0776199969

---

ஆரோக்கியமான சிறந்த சருமத்தையும் அழகையும் முகப்பொலிவையும் பெற்றுக்கொள்வதற்கு மூலிகை மூலம் தயாரிக்கப்பட்ட சவர்க்காரங்களைப் பெற்றுக் கொள்ள எங்களை அழைக்கலாம். எங்களது உற்பத்திகளுக்கு நாங்களே உத்தரவாதம். 0763352782

---

நீங்கள் ஒரு தொழிலைத் தொடங்குவதற்கு ஆர்வமாக இருக்கிறீர்களா? எப்படி தொழிலை ஆரம்பிப்பது என்ற குழப்பம் உங்களுக்கு இருக்கிறதா? இன்றே எங்களை நாடுங்கள். உங்களது முதலீட்டிற்கு ஏற்ப சிறந்த வியாபாரத் திட்டத்தினை உருவாக்கித் தருவதோடு தொழில் தொடர்பான ஆலோசனைகளையும் உங்களுக்கு வழங்க முடியும். - 0753780530

---

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய தரத்திலான கருவாடுகளைப் பெற்றுக் கொள்வதற்கு அழைக்கவும்.
0778412785

---

சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட சிறந்த ஔடதங்களைப் பெற்றுக் கொள்ள எங்களை அழைக்கவும்
0766996628

---

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மிக்சிகளுக்குரிய (கிரைண்டர்) பாட்ஸ்களும் (Parts), சைக்கிள் (Cycle) உதிரிப் பாகங்களும் (Parts) மொத்தமாக விற்பனைக்குள்ளன.
தொடர்புகளுக்கு - 077 6566508.

---

### காணி விற்பனைக்கு




A9 வீதியில் இருந்து 1km தூரத்தில் எழுதுமட்டுவாழ் - நாகர்கோவில் வீதியில் 2 பரப்பு, 4 பரப்புக் காணிகள் விற்பனைக்கு. இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுக் காலத்தினை அமைதியாகவும் ஆரோக்கியமாகவும் வாழ்வதற்கு ஏற்ற இடம். தொடர்புகளுக்கு 0779789177

---

மூலிகைத் தோட்டம் ஒன்றை மேற்பார்வை செய்வதற்கு ஓரளவு மூலிகைகளைப் பற்றிய அறிவும் தேக ஆரோக்கியமும் உள்ள ஒருவர் தேவை -
0772034807

---

### தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபலமான பத்திரிகை நிறுவனத்திற்குச் சந்தைப்படுத்தல் முகாமையாளர் தேவை - 0773078799

---

திருநெல்வேலியில் உள்ள அப்பக்கடை ஒன்றிற்கு அப்பம் சுடுவதற்கு ஒருவர் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம். 077 118 1590

---

பண்ணை வேலைக்கு ஆள் தேவை. சம்பளமாகச் சுமார் 55,000/= வீடு கொண்டு செல்லக்கூடியதாகவும் EPF&ETF முழுவதும் எம்மால் கட்டப்படுவதுடன் உணவும் எம்மால் வழங்கப்படும். (தங்கி நின்று வேலைசெய்வதுடன் மாத விடுமுறையில் வீடு சென்று வரலாம்) தொடர்புக்கு 0773024473

---

இயந்திர மூலம் குழாய்க் கிணறு அமைத்துத் தரப்படும்.
0775652282

---

கிளிநொச்சி - அக்கராயனில் சோளன் பொத்திகளைச் சந்தைப்படுத்த முடியாமல் விவசாயி, கிருஸ்ணபிள்ளை கரன் என்பவர் அவதிப்படுகிறார். இன்னும் ஐயாயிரம் (5000) பொத்திகள் அவரிடம் உண்டு. தேவைப்படுபவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளுங்கள்.
Krishnapillai Karan - 0773853765

---

### கல்வி

இம் முறை க.பொ.த(சா.த) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான தமிழ் மொழிப் பாடத் துரித மீட்டல் புலனக்குழுவில்(WhatsApp group) இணைய அனுமதிக்கட்டணம் 500/= மட்டுமே! [இலவச வகுப்புகள்- வரையறையற்ற கற்றல்- வித்தியாசமான கற்றல்- நவீன கற்றல்- எதிர்பார்க்கும் பெறுபேறு உறுதி.
தொடர்புகளுக்கு: - அ.வே.கோகிலன் - 94717326587

---

சிறந்த இசையமைப்பாளரால் ஒகன் வாத்தியம் கற்பிக்கப்படுகிறது. - 0772469113

---

வன்னி கல்லூரி கிளிநொச்சியில் இலகுவழியில் ஜெர்மன் மொழி A1 பரீட்சைக்கான இலகுவான முறையில் தயார்படுத்தல் இடம்பெறுகின்றது. தொடர்புகளுக்கு - 0769395457

---

கிளிநொச்சியில் ஆரிக்கலையினைக் கற்றுக் கொள்வதோடு உங்களுக்குத் தேவையான (design) ஆடைகளுக்கு ஆரிவேலைகளும் செய்து கொடுக்கப்படும். தொடர்புகளுக்கு - 0769395457



# பொருண்மியம் விருதுகள் - 2023

அனேகரின் வேண்டுகோளுக்கு இணங்க முடிவுத் திகதி ஓகஸ்ட் 31 வரை நீடிக்கப்பட்டுள்ளது.



எமது நாட்டின் பொருளாதாரப் பங்காளர்களாய் இருக்கும் தொழில் முயற்சியாளர்கள், மற்றும் கண்டுபிடிப்பாளர்களைக் கௌரவித்து பெருமைப்படுத்தும் நோக்குடன் “கிரீன் மீடியா” நிறுவனத்தின் தமிழர் பொருண்மியம் வார இதழ் சிறப்பு விருதுகளை வழங்கவுள்ளது. எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்தில் தமிழர் பொருண்மியம் நடத்தும் “கோடைக் கொண்டாட்டம்“ நிகழ்வில் இந்த விருதுகள் வழங்கப்படவுள்ளன.

இவ் விருதுகளை பெற்றுக்கொள்ள தகுந்தவர்கள் என்று நீங்கள் கருதும் தொழில் முயற்சியாளர்களை, அவர்கள் குறித்த சிறிய குறிப்போடு நீங்களே எங்களுக்கு சிபார்சு செய்யலாம்.

இதற்காக நீங்கள் செய்யவேண்டியது இதுதான். நீங்கள் சிபார்சுசெய்யும் தொழில் முயற்சியாளர் அல்லது கண்டுபிடிப்பாளரின்,

- பெயர்
- முகவரி
- மேற்கொள்ளும் தொழில் முயற்சி
- தொலைபேசி இலக்கம்
- விருதுக்காக நீங்கள் சிபார்சு செய்பவர் பற்றியதான சிறிய குறிப்பு என்பவற்றை எமக்குத் தெரியப்படுத்துங்கள்.

அத்துடன் உங்கள் பெயர், தொடர்பிலக்கம் என்பவற்றையும் தெரியப்படுத்துங்கள்.

## பொருண்மியம் சிறப்பு விருதுகள் பின்வரும் பிரிவுகளில் வழங்கப்படும்

1. சுய தொழில் முனைவோர் விருது
2. இளம் தொழில் முனைவோர் விருது
3. சிறந்த பெண் தொழில் முயற்சியாளர் விருது

உணவு உற்பத்தி, பாரம்பரிய கைத்தொழில்கள் (நெசவு, நூல் துணிகள், வாழை நார் உற்பத்தி, பனம்பொருள் உற்பத்தி போன்றன)
குடிசைக்கைத்தொழில்கள் (கைவினைப்பொருட்கள், ஆடை அணிகலன், பாதணிகள், சவர்க்காரம், போன்றன)

4. சிறந்த கண்டுபிடிப்பாளர் விருது

கண்டுபிடித்த உபகரணம் தற்போது பொதுப் பாவனையில் இருக்க வேண்டும், அத்துடன் எமது பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கு உதவுவதாகவும் இருக்க வேண்டும்.

5. பெருந்தொழில் முயற்சியாளர் விருது

பிரதேச சபை மற்றும் மாவட்ட/அல்லது கம்பெனி பதிவுகளை கொண்டிருக்க வேண்டும்.

சமூக அக்கறை மற்றும் சமூகத் தொண்டுகள் மேலதிக தகைமையாக கருதப்படும். நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி 31.08.2023

கீழ்காணும் மின்னஞ்சலுக்கு உங்கள் தகவல்களை அனுப்ப முடியும் - Tamilseconomy@gmail.com

மேலதிக தகவல்களுக்காக தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கம்.
0777276949




# அரசுடைமையாகும் கறுப்புப் பணம்

## இலங்கை அரசாங்கம் சமீபத்தில் பின்வரும் ஆண்டுகளில் வரி மன்னிப்பு வழங்கியுள்ளது:

• 1989 • 2004 • 2016 • 2021

## வெளிநாடுகளில் உள்ள கறுப்புப் பணத்தை அரசுடைமையாக்குவதற்குப் புதிய சட்டம்!



AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர்,
வரி முகாமைத்துவ ஆலோசகர்

வெளிநாடுகளில் உள்ள கறுப்புப் பணத்தைச் தேசியமயமாக்கப் புதிய சட்டம் எதுவும் தற்போது இலங்கையில் நடைமுறையில் இல்லை. கறுப்புப் பணத்தை மீண்டும் நாட்டுக்குக் கொண்டு வந்து அரசுடமையாக்குவதற்காகப் புதிய சட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்கு அரசு முடிவெடுத்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

“கறுப்புப் பணம்” என்பது சட்ட விரோதமாக அல்லது முறையாக அறிவிக்கப்படாமல் சம்பாதித்த பணத்தைக் குறிக்கிறது. பெரும்பாலும் இது வெளிநாட்டுக் கணக்குகள் அல்லது நாட்டிற்கு வெளியே உள்ள பிற நிதி நிறுவனங்களில் வைக்கப்படுகின்றது. இலங்கையில் தவறான வழியில் சம்பாதித்து அல்லது சட்டத்திற்கு முரணாக பணத்தினை ஈட்டி வெளிநாடுகளில் பதுக்கி வைத்திருக்கும் இலங்கையர்களின் கறுப்புப் பணத்தைக் கைப்பற்றுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது. போதைப்பொருள் வர்த்தகம் மூலம் சம்பாதிக்கப்பட்ட அதிகமான சொத்துக்கள் டுபாய் உள்ளிட்ட வெளிநாடுகளில் உள்ளதாகவும், அவற்றைப் புதிய சட்டம் மூலம் இலங்கைக்குக் கொண்டுவர முடியும் என்றும் அரச தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

கறுப்புப் பணத்தைச் தேசிய மயமாக்கும் திட்டங்களுக்குக் கடந்த காலங்களில் முன்மொழிவுகள் இருந்தன. ஆனால் இந்தத் திட்டங்கள் செயற்படுத்தப்படவில்லை. கார

ணம் அதில் பல சவால்கள் உள்ளன. பணத்தின் உரிமையாளர்களைக் கண்டு பிடிப்பதில் சிரமம், மற்றும் அத்தகைய நட வடிக்கையால் எழும் சட்டச் சவால்கள் போன்றன முக்கியமாக அமைகின்றன. அரசியல்வாதிகள், அரச அதிகாரிகள் மற் றும் வர்த்தகர்கள் ஆகியோரால் தவறான வழியில் சம்பாதிக்கப்பட்ட பல பில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமான பணம் மற்றும் சொத்துக்கள் வெளிநாடுக ளில் பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாகப் பல தகவல்கள் வெளியாகி வருவதனைக் காணலாம்.

இலங்கைக்கு வெளியில் பதுக்கி வைக் கப்பட்டுள்ள கறுப்புப் பணம் நாட்டின் பொருளாதாரத்தில் பல எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்துகிறது. இவற்றில் பின்வருவன அடங்கும்.

குறைக்கப்பட்ட அரசின் வரி வருவாய்: கறுப்புப் பணத்திற்கு வரி விதிக்கப்பட வில்லை. எனவே இது இலங்கை அரசாங் கத்தால் சேகரிக்கக்கூடிய உண்மையான வரி வருவாயின் அளவைக் குறைக்கிறது. இது பட்ஜெட் பற்றாக்குறைக்கு வழிவகுக் கின்றது. மேலும் இது அரசாங்கத்தின் தேவையான நிதிக்கு பல்வேறுவகையில் அழுத்தம் கொடுப்பதுடன் உட்கட்டமைப்பு, சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற முக்கி யமான துறைகளில் முதலீடு செய்வதைக் கடினமாக்குகின்றது.

நிதி அமைப்பைக் குறைமதிப்பிற்கு உட்படுத்துதல்: கறுப்புப் பணத்தைப் பல சவால்களுக்கு மத்தியில் சட்டபூர்வமாக அரசாங்கம் வெள்ளையாக்க முற்படும்போது மக்களிடம் நிதி அமைப்பின் மேலுள்ள நம்பிக்கையில் பாரிய தாக்கத்தினை ஏற் படுத்துவதோடு ஒருமைப்பாட்டைக் குறை மதிப்பிற்கு உட்படுத்தும். இது வணிகங் களுக்குக் கடன் மற்றும் முதலீடு செய்வதை மிகவும் கடினமாக்குகின்றது. அத்தோடு இது நிதிப் பரிவர்த்தனைகளைக் கண் காணிப்பதை அரசாங்கத்திற்கு மேலும் கடினமாக்குவதனை அவதானிக்கக் கூடிய தாக உள்ளது.

அந்நியச் செலாவணிக் கையிருப்பு குறைவடையும்: கறுப்புப் பணத்தைப் பயன்படுத்தி அமெரிக்க டொலர் போன்ற அந்நியச் செலாவணியை வாங்கப் பயன்ப டுத்தப்படுவதனை நடைமுறையில் காணக் கூடியதாக இருக்கின்றது. இது நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்பைக் குறைக்கும். இதன் காரணமாக அத்தியா வசியப் பொருட்கள் மற்றும் சேவைகளை இறக்குமதி செய்வதை அரசாங்கத்திற்கு மிகவும் கடினமாக்குதோடு நாட்டின் நாண யத்தின் நிலையான தன்மையையும் குறைப்பதனை நடைமுறையில் அவதா னிக்கக்கூடியதாக உள்ளது.

அதிகரித்த சமத்துவமின்மை: கறுப்புப் பணத்தை ரியல் எஸ்டேட் (வீடு, நிலம் மற்றும் ஏனைய அசையாச் சொத்துக்கள்) மற்றும் வணிகங்கள் போன்ற சொத்துக்க ளில் முதலீடு செய்யப் பயன்படுத்தலாம். இது சமத்துவமின்மையை அதிகரிக்கும். இதனால் ஏனைய மக்கள் புதிய தொழில் தொடங்குவதனையும் அவர்களின் வாழ்க் கைத் தரத்தை மேம்படுத்துவதனையும் கடினமாக்கிவிடும்.

நாட்டின் நற்பெயருக்கு அவப்பெயர் ஏற்படும்: கறுப்புப் பணம் அதிகமாகக் காணப்படும் எந்தவொரு நாட்டிலும் வணி கம் செய்வதற்கான பாதுகாப்பான மற்றும் வெளிப்படையான இடமாக இருப்பதனைக் கேள்விக்குறியாக்கி, நாட்டின் நற்பெயரை சேதப்படுத்தும். இது வெளிநாட்டு முதலீட்டை ஈர்ப்பதை மிகவும் கடினமாக்குவதுடன் பொருளாதாரத்தில் எதிர்மறையான தாக் கத்தை ஏற்படுத்தும்.

இலங்கையில் கறுப்புப் பணத்தின் பொருளாதாரத் தாக்கம் குறிப்பிடத்தக்கது. சமீப ஆண்டுகளில் கறுப்புப் பணத்தால் நாடு பில்லியன் டொலரிற்கு மேலதிகமாக வரி வருவாயை இழந்துள்ளதாக மதிப்பிடப் பட்டுள்ளது. இது முக்கியமான துறைகளில் முதலீடு செய்வதை அரசாங்கத்திற்குக் கடின மாக்கியுள்ளதுடன் நாட்டின் தற்போ தைய பொருளாதார நெருக்கடிக்கும் கார ணமாகவும் அமைந்துள்ளது.

கறுப்புப் பணப் பிரச்சினைக்குத் தீர்வு காண அரசு செய்யக்கூடிய பல விஷயங்கள் உள்ளன. இவற்றில் முக்கியமாகப் பின் வருவன அடங்கும்.

- வரி முறையை வலுப்படுத்துதல்: வரி முறையை அரசாங்கம் வலுப்படுத்து வதன் மூலம் மக்கள் வரி செலுத்தாதிருப் பதைத் தவிர்க்கலாம். உள்நாட்டு இறை வரித் திணைக்களத்தினால் மேற்கொள் ளப்படும் கணக்காய்வுகளின் எண்ணிக் கையை அதிகரித்தல், நிதிப் பரிவர்த்தனை களைக் கண்காணிப்பதை அரசாங்கத் திற்கு எளிதாக்குதல் போன்ற நடவடிக்கை கள் இதில் அடங்கும்.
- பணமோசடித் தடுப்புச் சட்டங்களை இயற்றுதல்: பணமோசடி செய்வதை மேலும் கடினமாக்குவதற்கு அரசாங்கம் பணமோசடித் தடுப்புச் சட்டங்களை இயற் றலாம். சந்தேகத்திற்கிடமான பரிவர்த்த னைகளைப் புகாரளிக்க வணிகங்கள் தேவை. அத்தோடு பணமோசடிக்கான அபராதங்களை அதிகரித்தல் போன்ற நடவடிக்கைகள் இதில் அடங்கும்.
- வெளிப்படைத்தன்மையை ஊக்கு வித்தல்: நிதிப் பரிவர்த்தனைகளை மக்கள் எளிதாகக் கண்காணிப்பதன் மூலம் அர சாங்கம் பொருளாதாரத்தில் வெளிப்படைத் தன்மையை ஊக்குவிக்க முடியும். வணி கங்கள் தங்கள் நிதித் தகவலை வெளியிட வேண்டும். அத்தோடு பொதுமக்கள் இந் தத் தகவலை அணுகுவதை எளிதாக்கு வது போன்ற நடவடிக்கைகள் இதில் அடங்கும்.

நாட்டிற்கு வெளியே பதுக்கி வைக்கப் பட்டுள்ள கறுப்புப் பணத்திற்கு எதிராக இலங்கையினால் கடந்த காலங்களில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பின்வருமாறு,

2017 ஆம் ஆண்டில், இலங்கை அரசாங்கம் வெளிநாட்டு வங்கிக் கணக்குக ளில் பெருமளவிலான பணத்தைப் பதுக்கி வைத்திருப்பதாகச் சந்தேகிக்கப்படும் பல உயர்மட்ட நபர்கள் மீது "white collar crime" விசாரணையைத் தொடங்கியது. விசாரணையில் பலர் கைது செய்யப்பட்டு பல கோடி ரூபாய் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

2020 ஆம் ஆண்டில், இலங்கை அரசாங்கம் ஒரு புதிய சட்டத்தை நிறை வேற்றியது. இது அதிகாரிகள் பணமோசடி வழக்குகளை விசாரிப்பதையும் வழக்குத் தொடருவதையும் எளிதாக்கியது. பண மோசடிக் குற்றங்களுக்கான தண்டனைக ளையும் இந்தச் சட்டம் அதிகரித்தது.

2021 ஆம் ஆண்டில், கறுப்புப் பணத் தின் ஆபத்துகள் மற்றும் சந்தேகத்திற்கிட மான நிதி பரிவர்த்தனைகளைப் புகார ளிப்பதன் முக்கியத்துவம் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த அரசாங்கம் பொது விழிப்புணர்வுப் பிரச்சாரத்தைத் தொடங்கி யது.

கறுப்புப் பணப் பிரச்சினைக்குத் தீர்வு காண இலங்கை அரசு எடுத்துள்ள நடவ டிக்கைகளின் சில எடுத்துக்காட்டுகளே இவை. கூடுதலாகக் கறுப்புப் பணத்தை தேசிய மயமாக்குவது மூலதனத்தை வெளி யேற்ற வழிவகுக்கும் அபாயம் உள்ளது. ஏனெனில் மக்கள் தங்கள் சொத்துக்களை அரசாங்கத்தால் கைப்பற்றக்கூடிய நாட் டில் முதலீடு செய்வது குறைவாக இருந்து வருவதனைக் காணக்கூடியதாக இருக் கின்றது.

இருப்பினும், இந்தச் சிக்கலைத் திறம் பட சமாளிக்க இன்னும் அதிகமாகப் பல திட்டங்கள் இலங்கையில் அமுல்படுத்தப்பட வேண்டும். இலங்கை அரசாங்கம் அதன் பணமோசடித் தடுப்புத் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளை மேலும் வலுப்படுத்த வேண்டும். அத்தோடு, அது சர்வதேசப் பங்காளிகளுடன் அதன் ஒத்துழைப்பை மேம்படுத்த வேண்டும்.

கறுப்புப் பணப் பிரச்சினையைத் தீர்ப் பதற்கு இலங்கை அரசாங்கம் எடுக்கக்கூடிய மேலும் சில குறிப்பிட்ட நடவடிக்கைகள் பின்வருமாறு அமையமுடியும்.

வணிகங்கள் தங்கள் ஆதாயமான உரிமைத் தகவலை வெளியிட வேண்டும் என்று சட்டத்தை இயற்ற வேண்டும். இது ஷெல்ஃ போலி நிறுவனங்கள் மற்றும் பிற வெளிநாட்டு நிறுவனங்களில் மக்கள் தங்கள் சொத்துக்களை மறைப்பதை மிக வும் கடினமாக்கும்.

(23ஆம் பக்கம் பார்க்க)

# தன்னம்பிக்கையும் விடாமுயற்சியுமே வெற்றிக்கு வழிவகுக்கும்



**நேர்கண்டவர் - ஞா.கவினி**

"தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சி
தன் மெய்வருந்தக் கூலி தரும்"

தன்னம்பிக்கையும் விடாமுயற்சியும் இருந்துவிட்டால் வாழ்க்கையில்எட்ட முடியாத பணிகளை எல்லாம் சுலபமாகக் கடந்து விடலாம் என்கிறார் ANK பாரம்பரிய உற்பத்திகள் தயாரிப்பு நிறுவனத்தின் நிறுவுனர்உதயகுமார் ரூபினி.

உள்ளூர் தொடங்கி உலகமெங்கும் பரந்து கிடக்கும் ANK உற்பத்திகளுக்கு சொந்தக்காரியான ரூபினியைத் தமிழர் பொருண்மியம்நேர்கண்டது.

2013 ஆம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் ஆரம்பிக்கப்பட்டது தான் எனது இந்த பயணம்.

அது ஓர் இக்கட்டான காலகட்டம். மனமொடிந்து போயிருந்த அந்தக் காலங்களில் தான்எனது சிந்தனைகளைத் திசை திருப்புவதற்காக எடுத்துக் கொண்ட ஒரு சிறிய முயற்சி இது. சோர்ந்து போய்க் கிடக்கின்ற நேரங்களில் தட்டிக் கொடுக்கும் கரங்கள் கிடைப்பது உண்மையில் வரம் தான். அப்படித்தான் புலம்பெயர் தேசத்தில் இருந்தும் எனது சகோதரியின்கரம் எனக்கு கிடைத்தது எனலாம். ஆரம்பத்தில் அம்மாவின் வழிகாட்டுதலில் மிளகாய்த் தூளினை மாத்திரமே உற்பத்தி செய்ய ஆரம்பித்தேன். ஏற்கனவே இதில் எனக்குப் பரீட்சையம் இருந்தாலும் அம்மாவின் வழிகாட்டுதல் தான்எனது உற்பத்தியின் விசேட தன்மைக்கும்இதில் பாண்டித்தியம் அடைவதற்கும் காரணமாக அமைந்தது.. மிகச் சிறிய அளவில் ஆரம்பிக்கப்பட்ட எனது மிளகாய்த் தூள் உற்பத்தி ஆனதுகாலப்போக்கில் கொஞ்சம் கொஞ்சமாக விரிவடைந்து சென்றது. ஒவ்வொரு தடவையும் மிளகாய் தூளுடன்சேர்த்து இன்னும் ஒவ்வொரு உற்பத்தியையும் செய்ய ஆரம்பித்தேன். தற்போது என்னிடம் இருபதுக்கு அதிகமான பாரம்பரிய உற்பத்திகள் இருக்கின்றன.



**சவால்கள்**

ஆரம்ப முதலே சவால்கள் என்னை சுற்றிக் கொண்டுதான் இருந்தன.. ஒரு பெண்ணாக தனித்து வியாபாரத்தை முன்னெடுப்பது என்பது மிகவும் சவாலான விடயம். அதுவும் கிராமங்களில் இருந்து வெளியே வரும் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் எழுத்தில் எழுத முடியாதவை வார்த்தைகளில் சொல்ல முடியாதவை. ஆரம்பத்தில் குடும்பத்தினருடன் மாத்திரம் உற்பத்திகளை மேற்கொண்டு வந்தேன். காலப்போக்கில் உற்பத்திகளை அதிகரிக்கும்போது பணியாட்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டிஇருந்தது. அப்போது சிறந்த பணியாளர்களை கண்டு பிடிப்பதும் நம்பிக்கைக்குரியவர்களை அடையாளம் காண்பதும் மிகவும் சவாலாக தான் இருந்தது. மூலப் பொருட்களை பெற்றுக் கொள்வதிலிருந்து அதனை பெறுமதி சேர்த்து சந்தைப்படுத்துவது வரை அத்தனைவேலைகளையும் பொறுப்பாக கவனிக்க வேண்டிய ஒரு முக்கியமான பாத்




திரமாக இருந்தேன். அந்த நேரங்களில் எதிர்கொண்ட அவமானங்கள்தான்எனக்கு உறுதியையும் நம்பிக்கையையும் கற்றுத் தந்தது. எல்லாவற்றையும் தாண்டி இன்று இந்த நிறுவனம் நிமிர்ந்து நிற்கிறது என்றால் அதற்கு முழுமுதற் காரணமும் எனது தன்னம்பிக்கையும் நிதானமும் தான்.




சவால்களைக் கண்டு பயந்து விடாமல் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் துணிவையும் அவற்றை எதிர்த்து நிற்கும் தன்னம்பிக்கையையும்நாங்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும். ஏதாவது ஒரு இடத்தில் நாங்கள் பயந்து முடங்கி விடுவோமானால் அந்த இடத்திலேயே நமக்கான வீழ்ச்சி ஆரம்பமாகிறது. நம்பிக்கையும் விடாமுயற்சியுமே வெற்றியை நோக்கி நம்மை வழி நடத்தும்.

**கனவுகள்**

இந்தத் தொழிலின் எதிர்காலத்தை குறித்து நிறையக் கனவுகள் இருக்கின்றன. சில வருடங்களாக மிகவும் நிதானமாக ஓடிக் கொண்டிருக்கின்ற இந்த நிறுவனத்தை விரிவுபடுத்தி மருகிக் கிடக்கின்ற நமது பாரம்பரியப் பண்டங்களை வெளிக் கொண்டுவர வேண்டுமென்றும், இன்னும் பல பேருக்கு வேலை வாய்ப்பினை அளிக்க வேண்டும் என்றும் விரும்புகிறேன். உண்மையில் எமது பிரதேசங்களை சுற்றி ஆயிரக்கணக்கான வளங்கள் இருக்கின்றன. அவற்றை பெறுமதி சேர்த்து புதிய உற்பத்தி பொருளாக சந்தைப்படுத்துவதற்கு விரும்புகிறேன். ஆடம்பரமான மற்றும் நாகரீக மோகங்களில் திளைத்து கிடக்கின்ற நம்முடைய. இளம்தலைமுறை



யினருக்கு நமது முன்னோர்கள் நமக்கு விட்டுச் சென்ற பாரம்பரிய உணவு பதார்த்தங்களைஅறிமுகப்படுத்துவதோடு அவர்களுக்கு அன்றாட வழக்கத்தில் இதனை பயன்படுத்துவதற்கும் பழக்கப்படுத்த வேண்டும். இந்தத் தொழிலைப் பற்றிய எனது கனவு மிகவும் நீண்டது. அந்த கனவுகள் எல்லாம் ஒரு நாள் மெய்ப்படும் என்று நம்புகிறேன்.

அத்தோடு நாங்கள் ஒவ்வொரு பெண்ணும் நமக்கென்று ஒரு சொந்தத் தொழிலைக் கற்றுக் கொண்டிருப்பது மிகவும் அவசியம். யாரிடமும் தங்கி வாழாத தனித்துவமான வாழ்க்கையை வாழ வேண்டும் என்று எண்ணினால் அல்லது உங்களுடைய குடும்பத்தை நீங்கள் நேசிக்கிறீர்கள் என்று சொன்னால் நீங்கள் ஒவ்வொருவரும் உங்களது தனிப்பட்ட தேவைகளை பூர்த்தி செய்யக் கூடிய வகையில் உங்களுடைய சொந்த பொருளாதாரத்தை நிவர்த்தி செய்யக்கூடியவர்களாக இருக்க வேண்டும். அதிகமான நேரங்களை நமது குடும்பத்தின் நன்மைக்காக செலவழிக்கும் நாங்கள்நமக்கென்று ஒரு பொருளாதாரத் திட்டத்தை வைத்திருக்க வேண்டியது மிகவும் அவசியமானதாக இருக்கின்றது என்கிறார் சுயதொழில் முனைவோராக தனது பயணத்தை ஆரம்பித்து இன்று பலருக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்து கொண்டிருக்கும் தொழிலதிபர் திருமதி உதயகுமார் ரூபினி.



# விளம்பரங்களால் மாறிய உணவுகள்

## எங்கள் வாழ்வும் வளமும்



- தமிழ்க்கவி -



“மெய்யேப்பா ஒரு கோழிச் சேவலை உரிச்சுத் தாங்கோ அஞ்சாறு நாளா மரக் கறிதானே, இண்டைக்குப் பள்ளிக்கூடம் இல்லை. பிள்ளையளும் வீட்டில நிக்குதுகள் எப்பன் இதம்பதமா சமைப்பம்.” அம்மா சொல்லுவார். அப்பா கோழியைப் பிடிக்கச் சொல்லி எங்களிடம் சொல்வார். நாங்கள் கூட்டுக்குள் சென்று கூவாத சேவலாக ஒன்றைப் பிடிப்போம். அது விடலைப்பரு வம். எலும்புகளும் கடிப்பதற்குப் பதமாக இருக்கும்.

அம்மா அந்தக் கோழிக்கறிக்கான சரக் குகளை அரைப்பதற்குத் தயார் செய்வார். அஞ்சாறு செத்தல் மிளகாய். மல்லி பெருஞ் சீரகம், வெந்தயம், நற்சீரகம், சிறிதளவு உழுத்தம் பருப்பு, புழுங்கல்அரிசி என்பன வும் மஞ்சள் இவை சேர்த்து ஒரு கூட்டு அரைக்கப்படும். அம்மிதான் வேறு வகை யாகின் உரலும் பயன்படும். அடுத்து இறைச்சிச் சரக்கு என்ற வகையில். ஏலக் காய், கறுவா, கராம்பு, பூலான்கிழங்கு சிறு துண்டு பத்திரி என்பவற்றை அளவாக பதமாக வறுத்து தனியாக அரைத்து அல்லது இடித்து வைப்பார். அவ்வளவுதான்.

இறைச்சிக்குழம்பில் பூடு, இஞ்சி, தக்காளி என்பன சேர்ப்பதில்லை. கறிவேப்பிலை மட்டும். உருளைக்கிழங்கு சிறிதளவு சேர்த்தால் அது அவிந்து கரைந்து குழம்பிற்கு தனிச்சுவை தரும். கோழி தவிர்ந்த மற்ற இறைச்சிகளுக்கு உருளைக்கிழங்கு சேர்ப் பதில்லை. கோழிக்கறி சமைத்தால் சொதிக் குப்பதிலாக ரசம் வைப்போம். அதில் சேரும் பொருட்கள் மல்லி மிளகு, நச்சீரகம் பூடு இரண்டு மூன்று செத்தல் மிளகாய் உப்பு பழம்புளி. இவ்வளவுதான்.

சரக்குகளை நேக அரைப்பதில்லை நருவல் புருவலாகத்தான் குத்தி எடுக்க வேண்டும். ரசம் பொங்கிக் கொதித்தால் கடுத்துப் போகும். எனவே அது திரைந்து பொங்கி எழும்போது கையால் தண்ணீர் தெளித்து அடக்கி இறக்கி விட வேண்டும்.. மீறி கொதித்தால் அதை வெளியே கொட்டி விடலாம் சரிவராது. இந்தக்கறிகளின் வாசம் நான்கு வீடுகளைத்தாக்கும். துண் டங்கள் முடிந்து போனாலும் குழம்பில் பிரட்டிய பழையசோறு அப்பப்பா என்ன சுவை என்ன சுவை.

இப்போது புறொய்லர் கோழி சாப்பிட வென்றே வளர்ப்பது. ஒரு வருட வளர்ச் சியை நாற்பத்தைந்து நாட்களில் தரும். இதை உரித்துப் பைகளில் போட்டு பலநாட் கள். என்ன மாதங்கள் வரையிலும் பாது காத்து சாப்பிடலாம் அதற்கான வசதிகள் வந்து விட்டன.

தொலைக்காட்சிகள் வந்த பிறகு சாதார ணமாக வீடுகளில் சமையல் முறைகள் மாறிவிட்டன. இந்திய முறைப்படியான சமையலுக்கு நாங்கள் மாறிவருகிறோம் என்பதல்ல மாறி விட்டோம். இந்திய மக்கள் பெரும்பாலும் சமையலில் கறிக்குத் தேங் காய் சேர்ப்பதில்லை சட்னி, சம்பல் சுண்டல் வகைகளில் தேங்காய் இருக்கும். அதற்குப் பதிலாக துவரம்பருப்பைச் சமையல் ஆரம் பிக்கு முன்பாகவே ஊறவைத்து அரைத்து சேர்ப்பார்கள். அது சமபல உணவாகவும் இருக்கும். எம்மிடம் தேங்காய் மிகையாக உள்ளது. எனவே நாம் கறிவகைகளில் தேங்காய் இல்லாமல் சமைப்பதில்லை. மேலும் பால்கறி அதாவது வெள்ளைக்கறி என்றொரு வகை தவறாமல் எமது உண வில் உண்டு.

தமிழ் மக்கள் தேங்காயைப் பிழிந்து முதலாவது பாலைத் தனியாக எடுத்து வைப்பார்கள். இரண்டாம் மூன்றாம் தடவை பிழியும் பாலில் கறி அவியும். இறக்குவதற்குப் பதமானதும் முதற்பாலை விட்டு அது பொங்கி வரும் போது அதிலி ருந்து எண்ணை பிரிவதற்குள் இறக்கி விடுவார்கள். இது சுவையும் தரும் தேங் காயை எண்ணையாகாமல் பாலாகவே உண்பதாகவும் அமையும்.

வானொலிகளின் காலத்திலும் சமை யல் குறிப்புகள் வருவதுண்டு நாம் பென்சி லும் கொப்பியும் வைத்துக் கொண்டு சொல லச் சொல்ல எழுதுவோம். இப்போது



தொலைக்காட்சி, யூரியூப் அலைகளில் சமையல் குறிப்புகள் வெற்றிநடை போடுகின்றன. அடுப்புகள் விதவிதமாக காட்டுகிறார்கள். சமைக்கும் எண்ணெய் வகையைத் தயாரிக்கும் நிறுவனங்கள், மசாலாக்களைத் தயாரிப்போர். இந்த நிகழ்ச்சிகளுக்கு அனுசரணை வழங்குகிறார்கள். அவர்கள் புழங்கும் பாத்திரங்கள் அதிகமாக ஒட்டாத பாத்திரங்கள். அதற்கான கரண்டிகள், சரக்கையோ மற்ற அரைக்கும் பொருட்களையோ அரைக்கும் யந்திரங்கள் பொருட்தட்டுகள், பரிமாறும் பாத்திரங்கள் அனைத்தும் விளம்பரங்களாகவே காட்டப்படுகின்றன.

எங்களுக்கும் கடைத்தெருவிற்குப் போகும்போது அந்தப் பொருட்கள் அனைத்தும் கடைகளில் வந்து கொலுவிருப்பதை காணக்கூடியதாக உள்ளது. எனவே நாமும் ஒரு நான்கு பொருட்களையாவது அதில் வாங்கவே செய்கிறோம். இப்போது நாம் வழக்கமாகப் பாவித்த பாத்திரங்கள் கரண்டிகள் உபயோகமற்றவையாகித் தெரிவதால் அவை பாவனைத்திறன் இருக்கும்போதே கழித்து மூலையில் வீசப்படும்.

சமையலைப் பார்ப்போம். இப்போது தொலைக்காட்சியில் பெரும்பாலும் காட்டப்படுவது அதாவது திரும்பத்திரும்ப என்றும் கூறலாம் பிரியாணி. சின்ன வயதில் எமது பாடப்புத்தகத்தில் முஸ்லிம்களுக்குப் பிடித்த உணவு பிரியாணி என்று படித்தோம். அது எம்மைப் பிரியாமல் எல்லா விழாக்களிலும் கொலுவிருக்கப்போவதை யாரறிவார். சரி சமையல் குறிப்புக்கு வருவோம் கோழியை உரித்து அளவாக வெட்டி வைக்கவும். தக்காளி தனியாக வெட்டி வைத்தாயிற்று அடுத்து வெங்காயம் போதியளவு நறுக்கி வைத்தாயிற்று வறமிளகாய் மல்லி பெரிய சீரகம், மஞ்சள், மிளகு, வெந்தயம், நற்சீரகம் இவற்றை தனியே தூளாக்கி நமது வீடுகளில் கறித்தூளாகவே வைத்திருப்போம்.

ஆக அதற்கு மேலாகக் காக்ஷ்மீரி மிளகாய்பவுடர் இஞ்சி பூடு கலந்து அரைத்த விழுது. செக்கில் அரைத்த நல்லெண்ணை அல்லது நெய். கறிவேப்பிலை கொத்தமல்லித்தளை ரம்பை, ஏலக்காய், கறுவா, கராம்பு, முந்திரிப்பருப்பு, சிறிதளவு கடலைப் பருப்பு, சிறிதளவு உழுத்தம்பருப்பு, பிறிஞ்சி இலை, கடுகு, சோம்பு, வெந்தயம் இவற்றை தனித் தனியாக நேரம் ஒதுக்கி அதன் அளவுக் கேற்ப முன்னர் எது பின்னர் எது என்று கவனித்துப் போட்டு வறுத்து அரைத்து எடுத்தால் பிரியாணி மசாலாவாம்.

நன்றாகக் கவனியுங்கள் இதில் எத்தனை பொருட்கள் மிக இலகுவாக எமது உணவு பழக்க வழக்கங்களை மாற்றி உட்புகுந்துள்ளன. தக்காளியைத் தனியாக கறி அல்லது சொதிவைத்தே பழகியவர்கள் நாம். இந்த சமையல் குறிப்புகளில் தக்காளி இல்லாமல் எந்தக்கறியும் கிடையாது. பாயாசம் பொங்கல் என்றால்மட்டும் பயன்படுத்திய முந்திரிப்பருப்பு கறிக்குள் விழுகிறது.

இதைவிட வெள்ளை மிளகு வெள்ளை கசகசா. இவை மட்டுமா சேயா சோஸ், சில்லிசோஸ், தக்காளி சோஸ், வைற்சோஸ் அடஅடஅட எத்தனை வகை சோஸ் கடைகளிலிருந்து நம்வீட்டு தட்டுகளுக்கு மாறி, அதைத் தொடர்ந்து சாப்பிட பழகாமல் அல்லது மனமொப்பாமல் ‘அது கிடக்கட்டும் வீட்டுக்கு ஆரும் விருந்தாளி வந்தா எடுப்பம்’ என குளிர்பதனப்படுத்தியே வைக்கிறோம். பொருளாதாரம் வீழ்ச்சி அடைந்து விட்டதாம் எங்கே இலங்கையில்தான். ஆனால் மளிகைக்கடைகளின் தட்டுகளில் இந்தப் பாவனையில் இதுவரை இல்லாத விளம்பரங்களால் பழக்கத்துக்கு வந்த எத்தனை பொருட்கள் அழகழகான டப்பாக்கள் போத்தல்கள் என வீற்றிருக்கின்றன.

இது உணவில்தான் சோப் வகைகள் கழுவும் திரவவகைகள் ஆடைகளுக்கு நறுமணமூட்டும் சலவைத் திரவங்கள் அதுவும் ஒன்றெடுத்தால் இன்னொன்று சும்மா. பாத்திரங்களை அடுப்பில் நெருப்பில் வைத்துச் சமைத்த கரிப்பாத்திரங்களை வெறுமனே சாம்பலும் வைக்கோற்தும்பு அல்லது தேங்காய்த் தும்பு கொண்டு தேய்த்துக் கழுவித் தொட்டால் கையில் கரிபடாமல் அழகாக அடுக்கிவைப்பா அம்மா. நானும் அப்படியும் கொஞ்சம் இப்படியும் கொஞ்சம் என ஒரு சோப்புத்துண்டையும் அதில் சேர்த்துக் கொள்வேன்.

இன்று கரிவராத அடுப்பில் கலாதியாகத்தான் சமைத்தாலும் பாத்திரங்களை கழுவச் சைனாவிலிருந்து தும்பு செய்யப்பட்டு அவை அழகிய பைகளில் அடைக்கப்பட்டுக் கப்பலில் பயணம் செய்து வாகனங்களில் எடுத்து வரப்பட்டுக் கடைகளில் அழகாக தொங்க விடப்பட்டு எமது பெண்களால் வாங்கிவரப்பட்டுப் பாத்திரங்களை தேய்க்கின்றதென்றால் விற்பவன் கெட்டிக்காரன் என்றுதானே சொல்ல வேண்டும். கண்களைத் திறந்து கொண்டே கிணற்றில் விழுந்தவர்களை என்னென்பது.

> ‘ தமிழ் மக்கள் தேங்காயைப் பிழிந்து முதலாவது பாலைத் தனியாக எடுத்து வைப்பார்கள் . இரண்டாம் மூன்றாம் தடவை பிழியும் பாலில் கறி அவியும். இறக்குவதற்கு பதமானதும் முதற்பாலை விட்டு அது பொங்கி வரும் போது அதிலிருந்து எண்ணை பிரிவதற்குள் இறக்கி விடுவார்கள். இது சுவையும் தரும் தேங்காயை எண்ணையாகாமல் பாலாகவே உண்பதாகவும் அமையும். ’



# இலாபம் தரும் புடலங்காய் பயிர்ச்செய்கை முறை

ஆனந்தன் பிரேம்நாந்
லக்சி பண்ணை



பந்தலில் புடலங்காய்க் கொடிகள் படர ஆரம்பிக்கும்போது ஒருமுறை மட்டுமே நிலத்தில் களைகளை அகற்றி செடியினை சுற்றி பாத்தி அமைக்க வேண்டும்.(sub taital)

புடலங்காய் ஒரு வெப்ப மண்டலப் பயிரா கும். இதன் நடுகைக்கு 25 முதல் 30 டிகிரிசெல்சியஸ்வெப்பநிலை தேவைப் படும்.

செம்மண், இருவாட்டி மண் மக்கிய மண். வண்டல் மண் போன்ற மண் வகைகள் நடுகைக்கு ஏற்றன.

மணல் மண், களிமண்,குறிப்பாக கற்கள் நிறைந்த நிலத்தில் நடுகை செய் யக்கூடாது.

மேலும் மித வெப்ப மண்டலப் பகுதிகளி லும் அதிகமான விவசாயிகளால் பயிரி டப்படுகின்றது. அவ்வாறு செய்யலாம்.

முற்றுமுழுதாக இயற்கையான முறை யில் செலவில்லாமல் புடலங்காய்ப் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளலாம்.

தென்னிந்தியா, பங்களாதேஷ், இலங்கை போன்ற நாடுகளில் அதிகளவில் உற்பத்தி செய்யப்படுகின்ற காய்கறிகளில் புடலங் காயும் ஒன்று.

புடோல் பயிர்ச்செய்கையைப் பொறுத்த வரை நாற்று மேடையில் பதியம் இட்டு. பின்பு பிடுங்கி நட வேண்டிய அவசிய மில்லை நேரடியாக குழிக்குள் நட்டு வளர்க் கலாம்.

ஒரு ஏக்கரில்ஆகக்கூடியது 675 வட் டப் பாத்தி மட்டுமே போட வேண்டி வரும் என்பதால் பாத்தி அமைப்பதற்கும் பராமரிப் பதற்கும் இலகுவாக இருக்கும்.

நடுவதற்கு முன்பு 1 × 1 × 1 என்ற அளவில். 8 அடி இடைவெளியில் குழி தோண்டி அதற்குள் 1 கிலோ மக்கிய ஆட்டு எரு அல்லது கோழி எரு அல்லது மாட்டு எருவோடு 250 கிராம் கிளிசிர்யா இலை களைக் கலந்து குளிக்குள் போட வேண் டும்.

இவ்வாறு செய்வதனால் காலப்போக் கில் கொடிகள் அபார விதமாக வளர்ச்சி அடையும்.

காய்த்திறனும் சிறப்பாக இருக்கும்.

புடலங்காயானது ஜூன் - ஜூலை மாதங்களும், டிசம்பர் - ஜனவரி மாதங்க ளும் நடுகை செய்ய ஏற்ற பருவமாகும்.

குறைந்தது 7 நாட்கள் வரை குளிக் குள் இவ்வாறு இயற்கை உரம் இட்டு நுண்ணங்கிபரிகரிப்பு செய்ய வேண்டும்.

அதன்பின் மேல் மண்ணை தூவி விட்டு ஒவ்வொரு குழிக்குள் மூன்று விதை வீதம் நடவேண்டும்.

ஓர் ஏக்கருக்கு 500 கிராம் விதைகள் போதுமானதாக இருக்கும்.

விதைகளை நட்டபின் ஒரு வாரம்



வரை ஒவ்வொரு நாளும் சிறிய அளவில் நீர் ஊற்ற வேண்டும்.

விதை முளைத்த பின்பு ஏழாவது நாளில் ஆரோக்கியமான இரண்டு கன்று களை விட்டு மூன்றாவது கன்றைப் பிடுங்கி விட வேண்டும்.

பின்னர் 2 வாரத்திற்கு ஒன்று விட்டு ஒரு நாள் நீர் பாய்ச்சி வர வேண்டும்.

விதை நட்டு மூன்றாவது வாரத்தில் செடிகள் படர ஆரம்பிக்கும்.

இத்தருணத்தில்செடிகளுக்கு மண் அணைத்து கம்புகள் ஊன்றி பந்தல் அமைக்க வேண்டும்.

அதோடு செடிகளின் நீர்த் தேவை யினை அறிந்து நீர் ஊற்றி வரவேண்டும்.

பந்தல் அமைக்கும்போது சிறந்த முறை யில் கவனமாக அமைக்க வேண்டும்

காரணம் புடலங்காய்ப் பந்தல் ஆனது பாவற்காய் போன்று அல்லாமல் ஒவ்வொரு காய்களும்கூடியது இரண்டு கிலோ வரை வளரக்கூடியதாக இருக்கும் என்பதனால் பந்தல் மிகவும் பாரமாக இருக்கும்.

பந்தலில் புடலங்காய்க் கொடிகள் படர ஆரம்பிக்கும்போது ஒருமுறை மட்டுமே நிலத்தில் களைகளை அகற்றி செடியினை சுற்றி பாத்தி அமைக்க வேண்டும்.

அதன் பிறகு நிலத்தில் அதிக அளவில் நிழல் விழுவதால் களைகள்முளைப்பது தானாக குறைந்து விடும்.

பயிர்களில் மஞ்சள் தன்மை இருந்தால் மீன் அமினோஅமிலத்தையும் பூச்சிக ளின் நடமாட்டம் இருந்தால் கற்பூர கரை சல் அல்லது மூலிகை கரை சலை பயன்படுத்த வேண்டும்.

அதிகளவில் பூச்சிகளின் தாக்கம் இருந்தால் இயற்கை கிருமி நாசினியான வீரியம் கூடிய அக்கினி அஸ்திராவை உற்பத்தி செய்து பயன்படுத்த வேண்டும்.

புடோல்பூக்க ஆரம்பிக்கும் போது கட்டாயம் தேமோர் கரை சல் பயன்படுத்திப் பூக்கள் உதிர் வதைக் கட்டுப்படுத்த வேண் டும்.

(மாலை வேளையிலே தெளிக்கவேண்டும்)

நீங்கள் நாட்டிய புடோல் இரகமானது நீண்ட காய் ரகமாக இருந்தால் நிச்சயம் நான்கைந்து நாட்களில் காயின்நுனிப் பகுதி யில் சிறிய அளவில் கல்லைக் கட்டித் தொங்கவிடவேண்டும்.

இவ்வாறு செய்வதனால் காய்கள் நீண்டு நேராக வளர ஆரம்பிக்கும்.

அதோடு காய்களின் நிறை யும் அதிகமாக இருக்கும்.

சிறிய காய்க்குரிய இரகமாக இருந்தால் அவ்வாறு செய்யத் தேவையில்லை.

பெரிய பண்ணைகளில் காய்களுக்கு ஒரு சேதமும்ஏற்படாமல் இருப்பதற்காக காற்றோட்டமான பொலித்தின் அல்லது கடதாசி பைகளை சுற்றி கட்டி விடுவார்கள்.

இவ்வாறு செய்வதனால் சேதமில்லாத அழகான காய்கள் கிடைக்கும்.

புடலங்காய்கள் ஐந்து அடி வரை வள ரக்கூடியதாக இருப்பதனால்

காய்களை அறுவடை செய்ய ஆரம்பிக் கும் போதுஇரண்டாக உடைக்காமல் அறு வடை செய்து சந்தைப்படுத்த வேண்டும்.

இவ்வாறு செய்வதனால் அதிகளவில் விளைச்சல் பெற்றுக்கொள்ள முடியும்.

சந்தை வாய்ப்பினைப் பற்றியும் ஐயம் கொள்ளத் தேவையில்லை.

மேலதிக ஆலோசனை தேவையெனில் தொலைபேசி ஊடாக எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

ஆனந்தன் பிரேம்நாத்
லக்சி பண்ணை
Ph: 0770239784
WhatsApp:0769196445



# பணக்காரர் பின்பற்றும் 10 பணப் பழக்கங்கள்



சி.மணிகண்டன்

பணக்காரர்களாக இருப்பவர்கள் பின்பற்றும் 10 முக்கியமான பணப் பழக்கங்களைப் பார்ப்போம். இந்தப் பழக்கங்களைப் பின்பற்றினால் நீங்களும் பணக்காரர் ஆக முடியும்.

### 1 வரவுக்குள் செலவு

பணக்காரர்கள் அனைவரும் வரவுக்குள் செலவு செய்பவர்களாக இருப்பார்கள். அதற்கு உதவுவது குடும்பப் பட்ஜெட் (Family Budget) ஆகும். பட்ஜெட் என்கிறபோது மாதச் சம்பளத்தில் 50% தொகையை வீட்டு வாடகை, பால், மளிகை, மின் கட்டணம், போக்குவரத்து உள்ளிட்ட அவசிய தேவைகளுக்கு ஒதுக்க வேண்டும். 20% தொகையைச் சினிமா, ஹோட்டல் சாப்பாடு, ஊர் சுற்றுவது உள்ளிட்ட ஆசைகள் மற்றும் பொழுதுபோக்குக்குச் செலவு செய்ய வேண்டும். மீதி 30% தொகையைப் பிள்ளைகளின் உயர்கல்வி, கல்யாணம், உங்களுடைய பணி ஒய்வுக்காலம் போன்ற எதிர்காலத் தேவைகளுக்குச் சேமிக்க வேண்டும்.

அவசியத் தேவைகளுக்கு ஏதாவது கூடுதல் பணம் தேவைப்பட்டால், ஆசைக்கு செலவு செய்யும் தொகையில் இருந்துதான் எடுத்துச் செலவு செய்ய வேண்டும். சேமிப்புக்கான செலவில் கைவைக்கக்கூடாது. இப்படிச் செய்யும் பட்சத்தில் வரவுக்குள் செலவு இருக்கும்.

### 2. முதல் செலவு முதலீடு

பெரும்பாலான பணக்காரர்களின் முதல் செலவு முதலீடாக உள்ளது. பொதுவாக, நடுத்தர மக்கள் பணத்தை சிறிது சிறிதாக உண்டியல் அல்லது வங்கியில் சேமித்து, அதைக் கொண்டு பிறகு தங்கம், வீடு போன்றவற்றில் முதலீடு செய்பவர்களாக இருக்கிறார்கள்.

ஆனால், பணக்காரர்கள் பணவீக்க விகிதத்தைவிட அதிக வருமானம் தரும் மற்றும் முதலீட்டுக்கு குறைவான வருமான வரி கட்டும் பங்குச் சந்தை சார்ந்த திட்டங்களில் நேரடியாக முதலீடு செய்கிறார்கள். அந்தத் திட்டங்களின் மூலம் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு தங்கம், காணி, வீடு போன்ற சொத்துகளை வாங்குகிறார்கள்.

பணக்காரர்கள் சம்பளம், சம்பாத்தியத்தில் குறிப்பிட்ட சதவிகித தொகையை (10% - 30%) தமக்காக முதலீடு செய்துவிட்டு மீதியைத்தான் செலவு செய்கிறார்கள்.

### 3. கடன் மேலாண்மை

பணக்காரர்கள் பெரும்பாலும் ஆக்கபூர்வமான கடன்களைத்தான் வாங்குகிறார்கள். தொழில் கடன், வீட்டுக் கடன் போன்ற செல்வத்தைச் சேர்த்துத் தரும் கடன்களை மட்டுமே அவர்கள் வாங்குகிறார்கள்.

அதிக வட்டியிலான கடன்களை அவர்கள் பெரும்பாலும் தவிர்த்துவிடுகிறார்கள். ஏதாவது, ஒரு தேவைக்குக் கடன் வாங்க வேண்டி இருக்கிறது எனில், தங்க நகை, சொத்துப் பத்திரம், முதலீட்டு ஆவணங்கள் (நிறுவனப் பங்குகள், மியூச்சுவல் /பண்டுகள், ஆர்.பி.ஐ கோல்டு பாண்டுகள்) ஆகியவற்றை அடமானம் வைத்துக் குறைந்த வட்டியில் கடன் வாங்குகிறார்கள். இந்தக் கடன்களுக்கு ஆண்டு வட்டி 9% - 11% வரைதான் இருக்கும்.

ஆனால், சாதாரணமானவர்கள் அதிகம் வாங்கும் தனிநபர் கடன்களுக்கு வட்டி 15% - 22% என உள்ளது. கிரெடிட் கார்டு கடன் வட்டி 35% - 45% என்ற அளவில் உள்ளது.

### 4. முதலீட்டு அறிவு

நுண்ணறிவுக்கு (Intelligence) கற்றல் (Learning) மிகவும் முக்கியமானது. அதிக முதலீட்டு இலாபத்துக்கு அது குறித்த பல் வேறு விஷயங்களைக் கற்றுக்கொள்வது அவசியம். பணக்காரர்கள் முதலீடு குறித்த அடிப்படை அறிவை பெற்றிருப்பதால், அவர்கள் அதிகம் நிதி மோசடியில் சிக்கிக் கொள்வதில்லை ஏமாறுவதில்லை.

### 5. முதலீட்டை ஆரம்பித்தல்

செல்வச் செழிப்பான குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் பிள்ளைகளை இளம் வயதிலிருந்தே முதலீடு செய்யப் பழக்குகிறார்கள். இதனால், அவர்களால் கல்லூரிப் படிப்பை முடித்து வெளியே வரும்போது இலட்சக்கணக்கான... ஏன் கோடிக்கணக்கான ரூபாயைக்கூட எளிதில் கையாள முடிகிறது.

கோடிக்கணக்கான சொத்து அவர்களுக்கு ஏற்கெனவே இருந்தாலும் இளம் வயதினர் சம்பாதிக்கத் தொடங்கும்போதே அவர்கள் அதை முதலீடாக்கி விடுகிறார்கள். உதாரணத்துக்கு, பிரபு என்பவர் அவரின் 30 வயது முதல் மாதம் ரூ.10,000 வீதம் அவரின் 60 வயது வரைக்கும் 30 ஆண்டுகள் முதலீடு செய்வதாக வைத்துக்கொள்வோம்.

கண்ணன் என்பவர் அவரின் 40ஆவது வயது முதல், இதைவிட இரு மடங்காக மாதம் ரூ.20,000 வீதம் 20 ஆண்டுகள் அவரின் 60 வயது வரைக்கும் முதலீடு செய்வதாக வைத்துக்கொள்வோம்.



இருவரின் முதலீட்டுக்கும் ஆண்டுக்கு சராசரியாக 12% வருமானம் கிடைத்தால், 60 வயதில் யாருக்கு அதிக தொகை கிடைத்திருக்கும்?

இன்றைக்குக் கோடீஸ்வரராக இருக்கும் பலர் இளம் வயதில் முதலீட்டை ஆரம்பித்த வர்கள்தான். உலகின் முன்னணி முதலீட்டாளரான வாரன் பஃபெட், பகுதி நேர சம்பாத்தியத்தின் மூலம் அவரின் 11ஆவது வயதில் முதலீட்டை ஆரம்பித்தார். அதையே அவர் தாமதம் என்று சொல்லி யிருக்கிறார்.

### 6. நிதி இலக்குகள்

செல்வந்தர்கள் எப்போதும் தங்கள் இலக்குகளில் கூடுதல் கவனம் செலுத்து கிறார்கள். அவர்கள் என்ன தேவைக்கு பணத்தைப் போடுகிறோம் என்பதை முடிவு செய்துவிட்டுத் தான் முதலீட்டை ஆரம்பிக் கிறார்கள். அவர்கள் இலக்கை நிர்ணயம் செய்வதோடு விட்டுவிடுவதில்லை. அதை நிறைவேற்றவும் திட்டமிடுகிறார்கள்.

அவர்களின் இலக்குகள் ஸ்மார்ட்டாக (SMART - Specific, Measurable, Achievable, Relevant, Timely) இருக்கிறது. அதாவது, குறிப்பிடத்தக்கது, அளவிடக்கூடியது, அடை யக்கூடியது, தொடர்புடையது மற்றும் சரியான நேரத்தில் நிறைவேற்றக் கூடிய தாக உள்ளது.

செல்வந்தர்கள் தங்கள் இலக்கை அடைய மிகவும் கடினமாக உழைக்கிறார் கள். அவற்றை அடையத் தேவைப்படும் தொகைக்கு, நீண்ட காலத்தில் பணவீக்க விகிதத்தைவிட அதிக வருமானம் தரும் நவீன முதலீடுகளான நிறுவனப் பங்குகள் மற்றும் பங்குச் சந்தை சார்ந்த மியூச்சுவல் ஃபண்ட் திட்டங்களில் தொடர்ந்து முதலீடு செய்து வருகிறார்கள்.

### 7. நிதி ஆலோசனை

செல்வந்தர்கள் பொதுவாக மிகவும் விடாமுயற்சியுடன் இருப்பார்கள். இது தொழிலில் மட்டுமல்ல முதலீட்டிலும் இருக் கிறது. அவர்கள் நிதி ஆலோசகர்களிடம் நிதி ஆலோசனை கேட்டுவிட்டு அதை அமுல்படுத்தாமல் இருக்கமாட்டார்கள். அவர்கள் ஒருபோதும் திட்டமிட்ட நிதி இலக்கை அடையாமல் அதைக் கைவிட மாட்டார்கள்.

குறைந்தது ஆண்டுக்கு ஒரு முறையா வது பணக்காரர்கள் அவர்களின் நிதி ஆலோசகர்களைச் சந்தித்து ஆலோசனை பெறுபவர்களாக இருக்கிறார்கள். இதே போல், ஆடிட்டர்களையும் ஆண்டுக்கு ஒரு முறையாவது கலந்து ஆலோசிப்ப வர்களாக இருக்கிறார்கள்.

இதனால், அவர்கள் முதலீட்டுக்கு வரு மான வரிச் சலுகை அதிகம் பெறுபவர் களாகவும் இலாபத்துக்கு குறைவான வரு மான வரி கட்டுபவர்களாகவும் இருக்கி றார்கள்.

### 8. காலத்தே செய்தல்

பணக்காரர்களை மின் கட்டணம், தண்ணீர் கட்டணம், கடன் தவணை, தொலைபேசிக் கட்டணம், காப்பீட்டு பிரீமி யம் அனைத்தையும் சரியான நேரத்தில் கட்டுவதால் அபராதத்தைத் தவிர்ப்பதோடு, தேவையில்லாத டென்ஷனையும் தவிர்க் கிறார்கள். இப்படி சரியான நேரத்தில் கட்டு வதால் அவர்களுக்குக் கிரெடிட் ஸ்கோர் அதிகமாக இருக்கிறது. இதனால், கடன்க ளும் குறைந்த வட்டியில் கிடைக்கின்றன எனலாம்.

இதேபோல் அவர்கள் பிள்ளைகளின் கல்விக் கட்டணத்தை முன்கூட்டியே கட்டி விடுகிறார்கள்.

### 9. நேரத்துக்கு முக்கியத்துவம்

செல்வந்தர்கள் பணத்தை (Money) விட நேரத்துக்கு (Time) அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். ஏனென்றால் பணத்தால் வாங்க முடியாத ஒரே விஷயம் நேரம். போன நேரத்தைத் திரும்பக் கொண்டு வர முடியாது என்பதை அவர்கள் புரிந்துகொள் கிறார்கள். மேலும், நேரம் என்பது பணத் தைவிடவும் மதிப்புமிக்கது என்பதையும் அவர்கள் புரிந்து வைத்திருக்கிறார்கள்.

“ செல்வந்தர்கள் எப்போதும் தங்கள் இலக்குகளில் கூடுதல் கவனம் செலுத்துகிறார்கள். அவர்கள் என்ன தேவைக்கு பணத்தைப் போடுகிறோம் என்பதை முடிவு செய்துவிட்டுத் தான் முதலீட்டை ஆரம்பிக்கிறார்கள். அவர்கள் இலக்கை நிர்ணயம் செய்வதோடு விட்டுவிடுவதில்லை. அதை நிறைவேற்றவும் திட்டமிடுகிறார்கள். ”

செல்வந்தர்கள், பயனற்ற விஷயங்க ளில் நேரத்தை வீணடிப்பதைத் தவிர்க்கி றார்கள். ஃபேஸ்புக், ட்விட்டர் போன்ற சமூக ஊடகங்களில் தேவையற்ற விஷ யங்களில் நேரத்தை வீணாக்குவதில்லை. சொந்தமாக விமானமே வாங்கியிருந்தா லும் அதை ஃபேஸ்புக்கில் போஸ்டிங் போடுவதில்லை. அதேநேரத்தில், அவர் கள் சமூக ஊடகங்களைப் பணம் சம்பாதிக்க பயன்படுத்துபவர்களாக இருக்கிறார்கள்.

### 10. முதலீட்டில் உணர்ச்சி

செல்வந்தர்கள் பெரும்பாலும் உணர்ச்சி வசப்படமாட்டார்கள். இதை அவர்கள் முதலீட்டிலும் மேற்கொள்கிறார்கள். எந்த ஒரு முதலீட்டிலும் உணர்ச்சி வசப்படாமல் நிதானமாகச் செயல்படுவது மூலம்தான் அவர்களால் மேலும் மேலும் செல்வம் சேர்க்க முடிகிறது.

ரியல் எஸ்டேட் சொத்தில் முதலீடு செய் வதாக இருந்தால் அது விலை வீழ்ச்சி கண்டிருக்கும்போது, மற்றவர்கள் வாங்கத் தயங்கும்போது துணிச்சலாக மலிவான விலையில் வாங்குவார்கள். அல்லது அவ சரத் தேவைக்கு யாராவது மிகவும் விலை குறைத்து விற்றால், அப்போது அதை வாங்கி விடுவார்கள். அதற்கான பணத்தை அவர்கள் சேர்த்து எப்போதும் தயார் நிலை யில் வைத்திருப்பார்கள்.

இதேபோல்தான் அவர்கள் தங்கம், பங்குச் சந்தை அனைத்திலும் மலிவாக இருக்கும்போது அதிகமாக முதலீடு செய் கிறார்கள். நல்ல விலை ஏற்றத்தில் இருக் கும்போது இலாபத்தை எடுத்துவிட்டு வெளியே வந்து விடுகிறார்கள்.



Dr.எஸ்.கிருபானந்தகுமாரன்
[BVSc,MVSc]
கால்நடை வைத்தியர், செட்டிகுளம்



எருமை வளர்ப்பு 01

# இலங்கையில் உள்ள எருமைகள்

இந்த வாரம் தொடக்கம் எருமை வளர்ப்புத் தொடர்பான பல விடயங்களை ஆராயப் போகிறேன். பசு மாடுகளைப் போல எருமை மாடுகளிலிருந்தும் மனித தேவைகளுக்குக் கணிசமான அளவில் பால் இறைச்சி பெறப்படுகிறது.

இன்றைய திகதியில் உலகில் அதிக பால் உற்பத்தியாகும் இந்தியாவில் எருமைப் பாலே அதிகம் பெறப்படுகிறது. இந்தியாவைத் தவிர பாகிஸ்தான், சீனா, எகிப்து, நேபாளம் போன்ற ஆசிய நாடுகளிலும் இத்தாலி போன்ற மத்திய தரைக் கடலை அண்மித்த ஐரோப்பிய நாடுகளிலும் அதிக எருமைகள் உள்ளன.

உலக எருமைப்பால் உற்பத்தியில் இந்தியா 70% ம் பாகிஸ்தான் 25% ஆம் பங்களிக்கின்றன. இத்தாலிய Mediterranean எருமைகளில் இருந்து Mozzarella சீஸ் வகை உற்பத்தியாகிறது.

இலங்கையைப் பொறுத்தவரை கணக்கெடுப்பின் படி 476,050 எருமை மாடுகள் உள்ளன. (2022 ஆண்டு கால் நடை உற்பத்திச் சுகாதார திணைக்கள புள்ளிவிபரம்). கிழக்கு மாகாணத்தில் 234,782 எருமைகள் உள்ளன. வடக்கில் 24,104. மேற்படி எண்ணிக்கையான எருமைகளில் இருந்து 2022 தரவின்படி 53.88 மில்லியன் லீட்டர் பால் கிடைத்திருந்தது.

இதே காலப் பகுதியில் 1612714 பசு மாடுகளில் இருந்து 326.12 மில்லியன் லீட்டர் பசும் பாலும் கிடைத்திருந்தது. (எருமை ,பசு சேர்த்து மொத்தம் 380



மில்லியன் லீட்டர் பால்). 2021 இல் இதை விட பால் அதிகம் உற்பத்தியாகியிருந்தது. 356.11 மில்லியன் லீட்டர் பசுப்பாலும் 55.95 மில்லியன் லீட்டர் எருமைப்பாலும் கிடைத்திருந்தன. (412.05 மில்லியன் லீட்டர் மொத்தப் பால்.) இலங்கையின் பொருளாதார நெருக்கடி இந்த உற்பத்திக் குறைவுக்கு காரணமாக அமைந்திருந்தது.

எருமைகள் இரண்டு வகை.ஒன்று River type எனும் வகை. அதிக பாலைத் தரும் வகையின. இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் இவை அதிகளவில் உள்ளன. மற்றையது swam type. இழுவைக்குப் பயன்படும் வகையாகும். சில கிழக்காசிய நாடுகளிலும் இந்தியாவின் வடகிழக்குப் பகுதிகளிலும் இவை உள்ளன.

இலங்கையில் உள்ள எருமைகள் சளைநச வலிந வகையின. இலங்கையில் இயற்கையாகவே உள்ள எருமைகளை

**எருமைகள் இரண்டு வகை. ஒன்று River type எனும் வகை. அதிக பாலைத் தரும் வகையின. இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் இவை அதிகளவில் உள்ளன. மற்றையது swam type. இழுவைக்குப் பயன்படும் வகையாகும். சில கிழக்காசிய நாடுகளிலும் இந்தியாவின் வடகிழக்குப் பகுதிகளிலும் இவை உள்ளன.**

இலங்கை எருமைகள் என்பார்கள். அதற்கு மேலதிகமாக இந்திய, பாகிஸ்தானிய வகை மூரா, நிலிரவி, சூர்தி இனக் கலப்பு எருமைகளும் உள்ளன.

சில தசாப்தங்களுக்கு முன் NLDB பண்ணைகளில் இலங்கையிலுள்ள உள்ளூர் எருமைகளை இந்திய வகை எருமைகளுடன் கலந்து கலப்பின எருமைகள் உருவாக்கப்பட்டுப் பண்ணையாளர்களுக்கு வழங்கப்பட்டன. இன்று அந்த எருமை வகைகளின் சந்ததிகள் கணிசமானளவு உள்ளூர் எருமைக் குடித்தொகையில் உள்ளன. அடுத்தடுத்த வாரங்களில் எருமைகளின் பயன்கள் அவற்றின் பொருளாதாரத்தைப் பற்றி விரிவாக ஆராய்வோம்.

# பொருளாதாரத் திட்டத்தின் பங்காளி பனை



- செங்கதிர் -

அரை நூற்றாண்டுக்கு முன்புவரை தமிழர்கள் பனைப்பொருட்களை அங்குலம் அங்குலமாக அனுபவித்து வாழ்ந்திருக்கிறார்கள். பனை நார், பனை ஓலை, பனை மட்டை, பனஞ் சட்டம், பதநீர், பனங்கருப்புக்கட்டி, கள், பனை நுங்கு, பனம் பழம், பனங்கிழங்கு எனப் பனை ஒவ்வொரு வளர்ச்சிக் கட்டத்திலும் உணவாகவும், மருந்தாகவும் மனிதகுலத்திற்குத் தன்னையே கொடையளித்ததால் இதனை, ”கற்பக விருட்சம்“ எனப் பெயரிட்டுப் பெருமைப்படுத்தியிருக்கிறார்கள் நம் முன்னோர்கள்.

### வரலாற்றில் பனை

அரை நூற்றாண்டுக்கு முன்புவரை தமிழர்கள் பனைப்பொருட்களை அங்குலம் அங்குலமாக அனுபவித்து வாழ்ந்திருக்கிறார்கள். பனை நார், பனை ஓலை, பனை மட்டை, பனஞ் சட்டம், பதநீர், பனங்கருப்புக்கட்டி, கள், பனை நுங்கு, பனம் பழம், பனங்கிழங்கு எனப் பனை ஒவ்வொரு வளர்ச்சிக் கட்டத்திலும் உணவாகவும், மருந்தாகவும் மனிதகுலத்திற்குத் தன்னையே கொடையளித்ததால் இதனை, “கற்பக விருட்சம்’ எனப்பெயரிட்டு பெருமைப் படுத்தியிருக்கிறார்கள் நம் முன்னோர்கள். தமிழர் வரலாற்றில் தமிழர்க்கும் பனைக்குமான மரபுரீதியான உறவைக் குறிக்கும் சான்றுகள் இலக்கியங்களில் ஆங்காங்கே இழைந்தோடுவதைப் பார்க்க முடிகிறது. ஈழத்து இலக்கியங்கள் தொடக்கம் பிரதேசத்து இலக்கியங்கள் வரை எங்கு பார்த்தாலும் பனையை விமர்சிக்காத எழுத்துக்களே இல்லை எனலாம். அழகர் மலையில் கண்டெடுக்கப்பட்ட கி.மு முதல் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டொன்று, “நெடுமலன்“ என்பவன் சமண முனிவர்களுக்கு கற்படுக்கை அமைத்துக் கொடுத்த நிகழ்வை “பாணித வணிகன் நெடுமலன்” என்று குறிப்பிடுகிறது.

பாணிதம் என்பது பனைகளிலிருந்து கிடைக்கப்பெறும் பதநீரைக் காய்ச்சி உருக்குவதால் கிடைக்கும் இனிப்பான பாகையைக் குறிக்கும் சொல்தானா என்பதாக ஆய்வு முடிவுகள் ஐயங்களைத் தோற்றுவித்தாலும் பெரும்பாலான ஆய்வுகள், பதநீரிலிருந்து கிடைக்கும் பொருளைக் குறிப்பிடுவனவாகவே முடிவுகளை முன்மொழிகின்றன.

கி.பி எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த திவாகர நிகண்டு பனையின் பெயர்களைத் தொகுத்துக் கூறுகின்றது. வள்ளுவப் பெருந்தகையார் அளவில் பெரியதைக் குறிக்கும் முகமாக ”பனை“ என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார்.

“தினைத்துணை நன்றி செயினும்
பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார்” (குறள்.104)

என்பது அவரின் குறள் மொழி. இதே போன்று மேலுமிரண்டு குறட்பாக்களிலும் பனையைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். கிறித்துவ மதத்தின் புனித நூலான விவிலியத்தில் ”நீதிமான் பனையைப் போல் செழித்து வளருவான்“ (சங்கீதம் 92:1215) என்ற இறை வார்த்தைகள் இடம்பெற்றுள்ளது.

இன்றும் மக்கள் வழக்கில் ஒலிக்கும் பனையின் உறுப்புக்களான தோடு, மடல், ஓலை, ஏடு, பாளை, ஈர்க்கு, குலை போன்ற சொல்லாடல்கள் தமிழர்களின் ஆகப் பழமையான இலக்கண நூலான தொல்காப்பியத்திலும் காணப்படுவதிலிருந்து பனையின் தொன்மத்தைத் தெரிந்துகொள்ள முடியும்.

கிறித்து பிறப்பதற்கு முந்தையதாகக் காலங்கணிக்கப்பட்ட ”தமிழி எழுத்துக்கள்“ என்று நவீன காலத்தில் அழைக்கப்படுகின்ற தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுகளில் ”பனை“ என்கிற சொல் இடம்பெற்றுள்ளது. மேலும் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு போன்ற சங்க இலக்கிய நூல்களிலும் பனை பேசுப் பொருளாக இருக்கிறது.

தமிழ் இலக்கியங்கள் மீதான மீட்சிக்கு

பனை ஓலைகள் ஆற்றிய பங்கு அளப்பரியது. இலக்கியங்களின் மீது தீராத காதல் கொண்ட மாந்தர்களின் மறைவுக்குப் பிறகு அவர்கள் பயன்படுத்திய நூல்கள், வரலாற்று ஆவணங்கள் யாவும் இலக்கிய வாசனையற்ற அவரின் வாரிசுகளால் தூக்கி எறியப்படுவதைப் போன்று, அக்காலத்தில் அறிவார்ந்த சான்றோர் பெருமக்கள் போற்றிப் பாதுகாத்த சங்க இலக்கிய ஓலைப் பிரதிகள், அவர்களின் பிந்தைய தலைமுறையினரால் பரணில் குவிக்கப்பட்டன.

சிலர் அவற்றைக் கொளுத்தி தமிழன்னையின் வரலாற்றுக்குத் தங்களையும் அறியாது கருந்திரை போர்த்தினர். மேலும் பூச்சிகளாலும், எலிகளாலும் சிதைந்தழிந்தது போக எஞ்சிய ஓலைப் பிரதிகளே கோயில்களிலும், புலவர்களது இல்லங்களிலும், குகைகளிலும் கண்டெடுக்கப்பட்டு அச்சு வாகனத்திலேற்றி, இன்று தாய்த் தமிழின் பெருமையைத் தமிழர்களின் அற வாழ்க்கையை உலகுக்குப் பறைசாற்றும் அறிவுக் களஞ்சியங்களாக விளங்கிக் கொண்டிருக்கின்றன.

திருஞானசம்பந்தரின் பதினொன்று பதிகங்களிலும், சுந்தரர் பாடிய தேவாரப் பதிகங்களிலும், புராணக் கதைகளிலும் பனை பற்றிய வருணனைகள் காணப்படுகின்றன.

பனையும் தமிழர் எழுத்து மரபும்

தமிழர்களின் எழுத்து மரபுக்குத் தனித்துவமான குணமுண்டு. அது பனை தந்த விழுதுகளால் வேர்விடத் தொடங்கியது. பனை ஓலைகள் தமிழர் வரலாற்றைத் தாங்கி நின்ற அரண்கள். ஆதித் தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட ஏடுகள் பனை மர ஓலைகளே. மன்னராட்சி கால நிகழ்வுகளை விளிக்குமிடத்து மன்னர்களுக்கும் அமைச்சர்களுக்குமிடையே நடைபெறும் உரையாடல்களின் போது ஓலை என்கிற சொல்லாட்சி இடம்பெறுவதை திரைப் படங்களில் அவ்வப்போது கேட்க முடியும். அதேபோல சங்க இலக்கியங்களான அகத்திணை, கலித்தொகை, அகநானூறு, நவநீதிப்பாட்டியல் போன்றவைகளில் "ஓலை" யைக் குறிக்கும் சிறப்புப் பெயர்கள் இடம் பெற்றுள்ளன.

சங்க கால மக்களின் மரபார்ந்த அறிவுச் செழுமையைச் சமகாலத்திற்கு கைமாற்றிய ஊடகமாக பனைமரங்கள் விளங்குகின்றன. பனை ஓலைகள் இல்லாதிருந்தால் தொடக்ககாலத்தில் புழக்கத்தில் இருந்த தமிழ் இலக்கண, இலக்கியங்கள் யாவும் புலவர்களின் நாவிலே தவழ்ந்து காற்றோடு கலந்திருக்கும்.

பனை மரத்திலிருந்து பெயர்த்து எடுக்கப்பட்ட ஓலைக் கீற்றில் எடுத்த எடுப்பிலேயே எழுத்தாணி கொண்டு எழுத்தை எழுதி விட முடியாது. எழுதுவதற்கு ஏற்ப ஓலைகளைப் பதப்படுத்தும் தொழில் நுட்பத்தினைத் தமிழர்கள் அறிந்திருக்கிறார்கள்.

அருங்காட்சியகத்தில் ஓலைச் சுவடிகள்




இன்றும் காட்சிப்படுத்தப்படுவதற்குப் பதப்படுத்தல் சார்ந்த நுட்பமும் காரணமாகும். ஓலைகளை எழுத்தாணி கொண்டு எழுதுவதற்கு ஏற்றாற்போன்று தயார்ப்படுத்துவதற்கு "ஏடு பதப்படுத்துதல்" என்கின்ற தொழில் நுட்பத்தினைக் கையாண்டிருக்கின்றார்கள்.

தமிழர்கள் ஓலை ஏடுகளில் எழுதிய முறையையும், எழுதப்பட்ட ஓலைகளைப் பராமரித்த முறையையும் ஜெர்மனியைச் சேர்ந்த கிறித்துவ மதகுரு சீகன்பால்க் பெருமைபடக் கூறியுள்ளார். அரேபிய நாட்டைச் சேர்ந்த பயணி அல்புருணி என்பவர் 1030இல் தென் இந்தியாவிற்கு வருகை தந்தபோது எழுதிய பயணக்குறிப்பில் பனைமரம் குறித்தும் பனை ஓலையில் எழுதும் முறை குறித்தும் சிலாகித்து எழுதியுள்ளார். இங்கே அடிக்கடி அயல் நாட்டைப் பற்றியும் பிற தேசத்தவர்கள் பனையைக் கொண்டாடியதைப் பற்றியும் சொல்ல வேண்டியது என் சேவை என்னவென்றால் காலம் காலமாக பனையோடும் பனை சார்ந்த உணவுகளோடும் கொண்டாடிக் கொண்டிருக்கும் நாங்கள் பனை பற்றி மறந்து போகிறோம். ஈழத்தின் அநேக பிரதேசங்களில் தமிழர் வாழ்வியலில் ஒன்றிப்போய் இருக்கும் பனை மரத்தின் பயன்கள் சொல்லி விட முடியாதவை. உணவாகவும் பண்டங்களாகவும் மாத்திரமன்றி உயிர்களைப் பாதுகாக்கும் அரண்களாகவும் ஒரு காலத்தில் நம்மை காப்பாற்றியவை பனை மரங்கள்

ஓலைகள் காலங்கடந்த நிலையில் சிதிலமடைய நேர்கையில் அதனைப் படியெடுக்கவும் செய்துள்ளதை அறிய முடிகிறது. அப்படிப் "படி" எழுதுகையில், நம் நாட்டு ஓலைகள் ரொம்பக் காலம் பழகிப் போனபடியால் நாங்கள் அந்த ஓலைக்குப் புது ஓலை போட்டு எழுதியிருக்கிறோம். ஏட்டுக்குற்றம், எழுத்துக் குற்றம், வாசகப்பிழை, வரி மாறாட்டம் இருந்தால் நீங்கள் அனைவரும் பொறுத்துக் கொள்ளவும்"" என்பதை முதன்மைக் குறிப்பாகக் குறிப்பிடும் முறையைக் கடைப்பிடித்தார்கள்.

மேலும் ஓலை எழுதுவதையே தொழிலாகக் கொண்டோர் தமிழ் மண்ணில் வாழ்ந்திருக்கின்றார்கள். அவர்களுக்கு முறையாக ஊதியமும் வழங்கப்பட்டு இருக்கிறது. இவர்களுக்கு வழங்கப்பட்ட ஊதியத்தைக் குறிக்க ஓலைக்காசு, ஓலை எழுத்துப் போறு போன்ற சொல்லாடலில் பயன்படுத்தியதாக பிற்கால சோழர் காலத்திய கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

தற்கால "கூரியர்" நிறுவனங்களைப் போன்று அன்றைய நாட்களில் ஓலையில் தூது அனுப்பும் நடைமுறையும் இருந்திருக்கின்றது. தூது சேதி அனுப்புவதில் ஓலையின் பயன்பாட்டை விளக்கும் நாட்டார் பாடல்களும் உண்டு. கி.பி. நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டு "ஓலைதூது" பற்றிப் புலப்படுத்துகிறது. இவ்வாறு தமிழர்களின் பொருளாதாரத்தோடு தமிழர்களின் நாகரீகத்தோடு தமிழர்களின் வாழ்வியலோடு உணவுப் பழக்க வழக்கங்களோடு என்று எல்லாமுமாகநம்மோடு இணைந்திருக்கும் நமது பொருளாதாரத்தின் பங்காளியானபனைமரம் பற்றி கூறிக் கொண்டே போகலாம்.அத்தகைய ஒப்பற்ற தன்மையுடைய பனைமரங்களைக் காத்து, உலகமய பொருளாதாரத்தை வீழ்த்தி பனைப் பொருட்களை உள்ளடக்கிய தமிழர் தற்சார்புப் பொருளாதாரத்தை மீட்டெடுக்கப் போராட வேண்டியது தமிழராய்ப் பிறந்த ஒவ்வொருவரின் வரலாற்றுக் கடமை.



# அரசுடைமையாகும் கறுப்புப் பணம்

# BLACK MONEY






(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிதி அமைப்பின் வெளிப்படைத் தன்மையை அதிகரிக்க, வங்கிகள் மற்றும் பிற நிதி நிறுவனங்கள் சந்தேகத்திற்கிடமான பரிவர்த்தனைகளைத் தகுந்த அதிகாரிகளுக்குப் புகாரளிப்பதனை ஒழுங்குமுறையாக மாற்றி அமைக்கலாம்.

மக்கள் தங்களுடைய கறுப்புப் பணத்தை இலங்கைக்குள் கொண்டு வருவதற்கு வரிச் சலுகைகளை வழங்குதல். திருப்பி அனுப்பப்பட்ட சொத்துக்களுக்குக் குறைக்கப்பட்ட வரி விகிதத்தை வழங்குவதன் மூலம் இதைச் செய்யலாம்.

பணமோசடித் தடுப்பு சட்டங்களின் அமுலாக்கத்தை வலுப்படுத்துதல். சந்தேகத்திற்கிடமான நிதிப் பரிவர்த்தனைகள் மீதான தணிக்கைகள் மற்றும் விசாரணைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம் இதைச் செய்யலாம்.

இந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் இலங்கை அரசாங்கம் நாட்டில் உள்ள கறுப்புப் பணத்தின் அளவைக் குறைப்பதற்கும், பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கும் உதவ முடியும்.

தனது எல்லைக்கு வெளியே வைக்கப்பட்டுள்ள கறுப்புப் பணத்தைக் கண்காணித்து கட்டுப்படுத்துவதில் உலக அளவில் வெற்றி பெற்ற நாடு என்று எதுவும் இல்லை. இருப்பினும், இந்தக் கடினமான சவாலில், எல்லை தாண்டிய கறுப்புப் பணத்தைக் கட்டுப்படுத்தச் சில நாடுகள் பின்வருமாறு செயற்படுவதனைப் பின்வருமாறு அவதானிக்கலாம்.

- சுவிட்சர்லாந்து: சுவிட்சர்லாந்து நாட்டில் வங்கி இரகசியம் நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளது. இது கறுப்புப் பணத்திற்கான பிரபலமான இடமாக மாறியுள்ளது. இருப்பினும் சந்தேகத்திற்கிடமான பரிவர்த்தனைகள் குறித்து அதிகாரிகளுக்கு வங்கிகள் தெரிவிக்க வேண்டும் என்ற சட்டத்தை இயற்றுவது உட்பட பலவகையான முறையற்ற நடைமுறைகளினைத் தடுக்க சுவிஸ் அரசாங்கம் சமீபத்தில் நடவடிக்கை எடுத்துள்ளது.

- யுனைடெட் ஸ்டேட்ஸ் (US): அமெரிக்காவில் வலுவான நிதி நுண்ணறிவுப் பிரிவு (FIU) உள்ளது. இது சந்தேகத்திற்குரிய நிதிப் பரிவர்த்தனைகள் பற்றிய தகவல்களைச் சேகரித்து பகுப்பாய்வு செய்வதற்குப் பொறுப்பாக உள்ளது. அமெரிக்க அரசாங்கம், பணத்தை மோசடி செய்த தனிநபர்கள் மற்றும் வணிகங்களுக்கு எதிராகக் கிரிமினல் வழக்குகளைத் தொடர்வதிலும் தீவிரமாக உள்ளது.

- யுனைடெட் கிங்டம் (UK): பணமோசடியை எதிர்த்துப் போராடுவதற்காக வடிவமைக்கப்பட்ட பல சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள் இங்கிலாந்தில் காணப்படுகின்றன (குற்றச் சட்டம் 2002 (Crime Act 2002)). UK அரசாங்கம் சந்தேகத்திற்கிடமான நிதிப் பரிவர்த்தனைகள் பற்றிய தகவல்களை மற்ற நாடுகளுடன் பகிர்ந்து கொள்வதில் தீவிரமாக உள்ளது.

- ஜெர்மனி: ஜெர்மனியில் வலுவான FIU உள்ளது. மற்றும் இந்நாடு, பணமோசடி வழக்குகளை விசாரிப்பதில் தீவிரமாக உள்ளது. ஜேர்மன் அரசாங்கமும் நிதி அமைப்பின் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துவதற்கு வேலை செய்து வருகிறது.

- சிங்கப்பூர்: பணமோசடி தடுப்பு மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு நிதியளிப்புச் சட்டம் 2001 உட்பட, பணமோசடியை எதிர்த்துப் போராடுவதற்காகச் சிங்கப்பூரில் பல சட்டங்கள் மற்றும் விதிமுறைகள் உள்ளன. சிங்கப்பூர் அரசாங்கம் சந்தேகத்திற்கிடமான நிதிப் பரிவர்த்தனைகள் பற்றிய தகவல்களை மற்ற நாடுகளுடன் பகிர்ந்து கொள்வதில் தீவிரமாக உள்ளது.

கறுப்புப் பணத்தைக் கண்காணித்து கட்டுப்படுத்துவதில் வெற்றி பெற்ற நாடுகளின் சில உதாரணங்கள் இவை. கறுப்புப் பணத்தைக் கட்டுப்படுத்தல் என்பது ஒரு தொடர்ச்சியான போர் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியம். மேலும் எந்தவொரு நாடும் இந்தப் பிரச்சினையை முற்றிலுமாக ஒழித்துவிட்டதாகக் கூற முடியாது. எவ்வாறாயினும், மேலே கூறிய நாடுகள் இந்தப் பகுதியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளன.

மேலும் அவர்களின் முயற்சிகள் கறுப்புப் பணத்தை எதிர்த்துப் போராடும் இலங்கை போன்ற மற்ற நாடுகளுக்கு ஒரு முன்மாதிரியாகச் செயற்படுகின்றன.

கறுப்புப் பணத்தை மீட்பதற்காக இலங்கை அரசாங்கம் முன்வைத்துள்ள புதிய சட்டமானது முன்னேற்றத்தின் ஒரு படியாகும். இருப்பினும், சட்டம் பயனுள்ளதாக இருப்பதையும் குடிமக்களின் உரிமைகளை மீறாமல் இருப்பதையும் உறுதி செய்யக் கவனமாக வடிவமைக்கப்பட வேண்டும்.

+94-777-802-900
Email: swaminathan@agsarma.com

இப்ப நடைமுறையில இருக்கிற கூரியர் சேவையளை முந்தி எங்கடை ஊரில மாட்டுவண்டில்கள்தான் பெரும்பாலும் செய்தன. அநேகமான பெரிய கமக்காரர் வீடுகளில இரட்டை மாட்டு வண்டில் அல்லது ஒற்றைத் திருக்கல் அல்லது இரண்டுமே நிண்டது. எங்கட கன ஆக்கள் மாட்டு வண்டில் தொழிலையே தங்கடை பிரதான தொழிலாகச் செய்தவை . இவையின்ரை பெயருக்கு முன்னால வண்டில் கார எண்ட அடைமொழி இருக்கும்.உதாரணமாக வண்டில்கார சோமு வண்டில் கார ராசன் வண்டில்கார செல்வம் எண்டு அவையின்ரை பெயர்கள் இருக்கும்.

வயல்களுக்குப் குப்பை எரு ஏத்துறது, நெல் ஏத்துறது, வைக்கல் ஏத்துறது,வயல் உழுகிறதுக்குத் தேவையான கலப்பை நுகம் எல்லாம் ஏத்துறதுஇந்த வண்டில்கள் மூலமாத்தான் நடக்கும். அதமாதிரி விற

முந்தி வெங்காயத்தோட்டம் செய்யிறவை பூவரசம் குழைகளைத் தாட்டுத்தான் பாத்திகளைத்தயார் செய்யிறவை. அது வெங்காயத்துக்கு நல்ல பசளை கண்டகிண்ட உரம் ஒண்டும் அவை போடுறேல்லை எண்டு எங்கடை ஆச்சி சொல்லுறவ. வெங்காயசீசன் துடங்க முந்தி வெளியூர் தோட்டக்காறர்கள் மாட்டு வண்டில்களோடை பூவரசம் குழைக்கட்டுகளை ஏத்துறதுக்கு எண்டு போட்டி போட்டுக் கொண்டு எங்கடை ஊருக்கு வருவினம். பூவரசம் குழைக்கட்டுகளை வித்து வித்தே எங்கடை பெண்டுகள் கொஞ்சக் காசைத் தேடிப்போடுவினம். பூவரசம் குழை விக்கிறவை மட்டும் எண்டில்லை பூவரசம் குழை வெட்டுறவையும் காசு உழைப்பினம். அதோட உந்த மசுக்குட்டித் தொல்லையும் இருக்காது. அதமாதிரி உந்தத் தோட்டக்காரர் மாட்டெருவையும் வண்டில்

கொண்ட ஒற்றைத்திருக்கல் வண்டில்களைப் பார்த்திருக்கிறன். இதை விட தண்ணி ஏத்திற பீப்பா வண்டில்களும் கனபேற்றை வீடுகளில இருந்தன. இந்த வண்டில்கள் ஊரில் குறிப்பாக வட்டுக்கோட்டையில் செய்யப்பட்டாலும் பீப்பா பாணந்துறை மாதிரி இடங்களிலை இருந்துதான் கொண்டு வருவினம். பள்ளிக்கம் போக முந்தி நாங்கள் வயல் தறவையளில இல்லாட்டில் கடற்கரைகளில உள்ள நல்ல தண்ணிக் கிணறுகளில பீப்பா வண்டில்களிலை தண்ணி ஏத்தியந்து வீட்டில கட்ட வேணும். உந்த வண்டிலிலை தண்ணி ஏத்தி விக்கிறதைச் சிலர் பெண்டு கள் உட்பட ஒரு தொழிலாகச் செய்தவை. எங்கட ஊரில இன்னுமொரு வண்டில் பிரபலமாக இருந்தது அதுதான் மண்ணெண்ணெய் வண்டில்.சிலரிட்டை மட்டுந்தான் இவ்வண்டில்கள் இருந்த படியால

# எங்கட ஆச்சி



- காரைக்கவி கந்தையா பத்மானந்தன் -

கேத்துறது,தேங்காய் ஏத்துறது, கிடுகு ஏத்துறது பனை ஓலை மற்றும் வீட்டுச் சாமான்கள் ஏத்துறது எல்லாம் இந்த வண்டில்கள் மூலமாத்தான் நடக்கும். முந்தி எல்லாம் சுடலைக்குச் சவம் போக முந்தி கட்டைகள் ஏத்தின வண்டில்கள் தான் போகும். கட்டிட வேலையளுக்கு மணல் கல்லு மரம் ஓடு ஏத்திறதும் இந்த வண்டில்கள் மூலமாத்தான் நடக்கும்.

முந்தி எங்கடை ஊருக்கு வெளி ஊர்களில இருந்து தேங்காய் ஏத்தின வண்டில்கள் எல்லாம் ஒழுங்கை ஒழுங்கையாக ஒழுங்காக வந்து போகும் வண்டில்காரர் தேங்காய் தேங்காய் எண்டு கத்துவினம் . சத்தம் கேட்டதும் பெண்டுகள் படலையுக்கை போய் நிண்டு பேரம் பேசித் தேங்காய் வாங்குவினம். ஏ 9 ரோட்டில் முந்தி இரவில வெளிச்சத்துக்காக லாந்தர் விளக்குகளை ஏற்காலுக்குக் கீழை முன்னாலையும் பின்னாலையும் கொழுவினபடி கிடுகு, தேங்காய், தென்னை மட்டை, வைக்கல் ஏத்தின வண்டில்கள் சலங்கைச் சத்தத்தோடை ஊர்வலமாக ஊர்ந்து போறதைப் பாக்கச் சரியான வடிவாய் இருக்கும் எண்டு அப்பு சொல்லுறவர்.

களில வந்து வாங்கிக் கொண்டு போவினம். அவைக்கு வித்து காசு வாங்க வேணும் எண்டே பெடிபெட்டையள் ஒழுங்கைகளில கோவில் வீதிகளில கிடக்கிற எருவெல்லாம் குஞ்சுக் கடகத்திலை அள்ளியந்து குவிச்சு வைப்பினம். எரு அள்ளிற போட்டி கூடி சில நேரங்களில சண்டை சச்சரவிலையும் வந்து முடியும்.

இத மாதிரி வெளியூர்களில் உள்ள சன்னிதி,கீரிமலை, நல்லூர், மாவிட்டபுரம், வற்றாப்பளை, திருக்கேதீஸ்வரம் கோயில் திருவிழாக்களுக்கும் வண்டில் கட்டி ஆக்கள் போறவை எண்டு ஆச்சி சொல்லுறவ. வண்டில் பலகையில் வைக்கல் பரவி அதுக்கு மேல புற்பாய் போட்டு இருக்கை தயார் செய்வினம் .சமையல் சாமான்கள் பாத்திர பண்டங்கள் தண்ணி மாட்டுக்கு வைக்கல் எல்லாம் கொண்டு போவினமாம். தன்ரை சின்ன வயசில கதிர்காமத்திற்கும் தன்ரை ஆச்சி அப்புவோடை வண்டிலில போனதெண்டு ஆச்சி சொல்லுவா.

சிலற்றை வீடுகளில குதிரை வண்டில போல் ஆசன அமைப்பும் கூரையும்

அவையின்ரை பெயருக்கு முன்னாலை மண்ணெண்ணெய் அடைமொழியாக இருக்கும். அவை பெற்றோல் செற்றுகளில போய் மண்ணெண்ணெயை ஏத்தியந்து வீடுவீடாக விப்பினம்.

வண்டில்காறர்கள் தங்கடை மாடுகளைத் தங்கட குடும்பத்தில் ஒருவராகத்தான் பாவிச்சவை. அந்த மாடுகளுக்கு ஒழுங்கான கடல் குளிப்பு, சாப்பாடு, ஓய்வு எல்லாம் குடுத்தவை. அதுகளுக்கு தீன் குடுத்த பிறகுதான் தாங்கள் திண்டவை. மாடுகளை வெண்டயம் சங்கிலி சலங்கை கட்டி அழகு பார்த்தவை. சிலருக்கு மாடுகளிலை அலாதிப் பிரியம். ஏன் பைத்தியமாகவே இருந்தவை. அவையை நாங்கள் அவையின்ரை பெயருக்கு முன்னாலை மாட்டு எண்ட அடைமொழியை வைச்சுக் கூப்பிட்டனாங்கள். சலங்கை சத்தம் போட மாட்டு வண்டில்கள் போறது ஒரு வடிவு அந்த வடிவை இண்டைக்கு அவ்வளவுக்கு ஆராதிக்க முடியாமல் எங்கட வாழ்க்கை முறை அமைஞ்சது ஒரு சாபம் எண்டுதான் சொல்ல வேணும்.

இவ் வாரஇதழ் நல்லூர், No.68, Crossette lane, யாழ்ப்பாணத்திலுள்ள Green Media House (Pvt) Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.08.2023இல் வெளியிடப்பெற்றது.